விலை: 50.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1417)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 03 திங்கட்கிழமை (15.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 058

## முன்னாள் சபாநாயகர் கொரோனாவால் பலி



(கொழும்பு).

முன்னாள் பாராளுமன்ற சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார நேற்று தனது 81 ஆவது வயதில் காலமானார் என்று குடும்ப வட்டாரங்கள் தெரிவித்தன.

கோவிட்-19 தொற்றுநோயால் 19

## யாழ்.தீவுகளை சீன நிறுவனங்களுக்கு வழங்குவது தமிழர்களுக்கு பாதிப்பு

### ஒன்றிணைந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் 3 தீவுகளில் சீன முதலீட்டில் புதுப்பிக்கத்தக்க மின்சார சக்தி திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதென தமிழ்த் தேசிய கட்சிகள் கூட்டாக முடிவெடுத்துள்ளன.

இது தொடர்பில் தூதரக மட்டத்தில் 19



## கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் இரு குழுக்களிடையே மோதல்

### ஒருவர் பலி; மூவர் படுகாயம்

(முறிகண்டி)

கிளிநொச்சி உமையாள்புரம் பகுதியில் இரு குழுக்களிடையே பரஸ்பர மோதலில் ஒருவர் பலியானதுடன் மேலும் மூவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை 11.30 மணியளவில் ஏ9 பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ 19

## கொரோனாவால் இறப்பவர்களை அடக்கம் செய்ய அனுமதி

### நிபுணர் குழு அறிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் மற்றும் தகனம் செய்வதற்கு தாம் உள்ளிட்ட குழு அனுமதி வழங்கியதாக, இறுதிக் கிரியைகள் இடம்பெற வேண்டிய முறைமை தொடர்பில் பரிந்துரை முன்வைப்பதற்காக நியமிக்கப் 19

# இலங்கைத் தமிழர்களின் உரிமையை உறுதி செய்ய இந்தியா நடவடிக்கை

## தமிழகத்தில் இந்தியப் பிரதமர் மோடி தெரிவிப்பு



(சென்னை)

**இலங்கையில் வாழும் தமிழர்களின் உரிமையை உறுதி செய்வதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கைளை எடுத்து வருவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

**தமிழகத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அங்கு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அங்கு மோடி மேலும் உரையாற்றுகையில்,

"இலங்கை தமிழர்களின் யாழ்ப்பாணம் சென்று வந்த ஒரே இந்தியப் பிரதமர் நான்தான். கடந்த கால அரசுகளைக் காட்டிலும் தற்போதைய மத்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு உதவி வருகிறது.

இலங்கைத் தமிழர்களுக்காக சுமார் 50 ஆயிரம் வீடுகளை மத்திய அரசு கட்டிக் கொடுத்துள்ளது. மலையக மக்களுக்கும் வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தமிழர்களின் உரிமையை உறுதிப்படுத்த தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அத்துடன், சென்னை - யாழ்ப்பாணம் இடையிலான விமான சேவையும் தொடங்கப்பட்டுள்ளது

மேலும், யாழ்ப்பாணத்தில் இந்தியாவினால் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ள கலாசார மண்டபம் விரை 19

## வடக்கில் நேற்றும் 12 பேருக்கு கொரோனா

### கிளிநொச்சியில் 10 பேர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை ஆய்வு கூடத்தில் நேற்று 379 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 12 பேருக்கு 19

### ஜெனிவாவில் இந்தியாவின் ஆதரவைப் பெறவே

## யாழ்ப்பாணத்தில் 3 தீவுகள் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது

### நீதியரசர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

ஜெனிவாவில் இந்தியாவின் ஆதரவை இலங்கை அரசு பெறுவதற்காகவே வடக்கு 19

## சுழிபுரம் பகுதியில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சுழிபுரம் பகுதியில் ஒரு கிலோ கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் நேற்று ஞாயிற்றுக்கிழமை 19

## 400ஐ நெருங்கும் கொரோனாப் பலி

### நேற்றும் 7 பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 7 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்று 19

## கம்பியால் தாக்கியதில் குடும்பஸ்தர் படுகாயம்

### யாழ்.கண்டி வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் ஒருவர் மீது மூவர் சேர்ந்து இரும்பு கம்பியால் தாக்கியதில் குடும்பஸ் தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு 19

# துறைமுகத்தின் மேற்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்க உத்தேசம்

## வெளிவிவகார அமைச்சர் தினேஷ் அறிவிப்பு



(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தை இந்தியாவிற்கு வழங்க உத்தேசித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், இந்தியாவுடனான உறவு ஒரு திட்டத்துடன் மாத்திரம் முடிந்து போகாது எனவும், இரு நாடுகளுக்கும் இடையேயான சிறந்த நட்புறவின் மூலம் இந்தச் சிக்கல்களைத் தீர்க்க முடியும் என அவர் கூறியுள்ளார்.

மேலும், இந்தியாவுடனான பாரிய திட்டங்கள், முதலீடுகள் மற்றும் ஒத்துழைப்பு நடவடிக்கைகள் தொடரும் என தினேஷ் குணவர்த்தன குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, ஆரம்பம் முதல் அரசாங்கத்துக்கு கிழக்கு முனையம் தொடர்பாக பாரிய அர்ப்பணிப்பு காணப்பட்டது எனவும், இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை நடத்திய பேச்சுவார்த்தைகளின் தோல்வி இந்தப் பிரச்சினையில் பாரிய செல்வாக்குச் செலுத்தியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஞா)

# சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு இன்று 15 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் அபிஷேகம் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று விநாயகப் பெருமான் வீதியுலா இடம்பெறும். (ஞா)

# கோட்டாபயவைப் போன்று என்னால் பணியாற்ற முடியாது

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பணியாற்றுவதனை போன்று, தன்னால் பணியாற்ற முடியாது என பிரதமர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பேருவளை பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே பிரதமர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாளொன்றுக்கு 15 மணித்தியாலங்கள் பணி புரியும் தலைவர்.

ஜனாதிபதி, அனைத்து உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அனைத்து நிறுவனங்கள் தொடர்பிலும் புரிந்துணர்வுடன் பணியாற்றி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி இவ்வாறு பணியாற்றுகின்றமையினால், நாம் அதிலிருந்து பயனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

அரசாங்கமொன்றை ஸ்தாபித்ததன் பின்னர், அந்த அரசாங்கத்திடமிருந்து வேலை வாங்க வேண்டியது மக்களின் பொறுப்பு என தான் நினைப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஞா)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# அச்சுவேலி பொதுச் சந்தையில் 33 பேரிடம் பி.சி.ஆர் பரிசோதனை

## எவருக்கும் தொற்று இல்லை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி பொதுச் சந்தை வியாபாரிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் என 33 பேரின் மாதிரிகள் பெறப்பட்டு பிசிஆர் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டதில் எவருக்கும் தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது.

இந்த தகவலை வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அச்சுவேலி பொதுச் சந்தையில் கடந்த வெள்ளிக்கிழமை எழுமாறாக மாதிரிகள் பெறப்பட்டு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டது. அவர்கள் நால்வரும் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

இந்த நிலையில் அச்சுவேலி பொதுச் சந்தையில் வியாபாரிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் என 33 பேரின் மாதிரிகள் நேற்று பெறப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. எவருக்கும் தொற்று இல்லை என அறிக்கை கிடைத்துள்ளது.(ஞா)

# குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்துக!

## ஜேர்மனியில் கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைச் சபை தீர்மானம், இலங்கையை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தக் கோரும் வகையில் அமைய வேண்டுமென்பதனை வலியுறுத்தி, ஜேர்மன் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இணையவழி கையெழுத்து இயக்கம் ஒன்று இடம்பெற்று வருகின்றது.

இலங்கை தொடர்பில் தீர்மானத்தினை முன்னெடுக்கின்ற கூட்டு நாடுகளில் ஒன்றாக ஜேர்மனும் இருக்கின்றது. கனடா, பிரித்தானிய ஆகிய நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் கையெழுத்து இயக்கம் அந்நாடுகளில் இடம்பெற்று வருகின்றது.

இதனொரு அங்கமாக ஜேர்மனியிலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினால் இணையவழியிலான கையெழுத்து இயக்கம் தொடங்கப்பட்டு www.gerechtigkeitfür tamilen.de எனும் இணையவழி மூலமாக மக்களால் ஒப்பமிடப்பட்டு வருகின்றன.

1) இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்துக்கு அனுப்புவதற்கான பரிந்துரையோடு, ஐ.நா பாதுகாப்பு சபைக்கு அனுப்ப வேண்டும்.

2) மானிடத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனப்படுகொலை மீண்டும் நிகழ்வதைத் தடுக்கும் பொருட்டு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களே தமிழ்த் தேசிய இனச்சிக்கலுக்கான நிரந்தர அரசியல் தீர்வினைக் காண அனுமதிக்கப்பட வேண்டும்.

3) போரினால் விதவைகளான 90,000 தமிழ்ப் பெண்களின் நிலை குறித்தும், காணாமலாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்களின் நிலை குறித்தும், சட்டத்துக்கு புறம்பாகச் சிறை வைக்கப்பட்ட தமிழ் போர்க்கைதிகளின் நிலைமை குறித்தும், வெவ்வேறு காரணிகளில் முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு குறித்தும், இராணுவமயமாக்கல் குறித்தும், ஐ.நா மனிதவுரிமைகளுக்கான உயராணையர் அலுவலகத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை ஐ.நா மனிதவுரிமைப் பேரவைக்கு தொடர்ந்து அறிக்கை சமர்பிக்க வேண்டும்.

ஆகிய மூன்று நிலைப்பாடுகளை ஜேர்மன் உட்பட கூட்டு நாடுகளால் கொண்டு வரப்பட இருக்கின்ற புதிய தீர்மானத்தில் உள்ளடக்க வேண்டும் என கோரியுள்ள இந்த கையெழுத்து இயக்கம், தாயக தமிழ் அரசியல் தரப்பு, சிவில் சமூகமும், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் ஆகியன எடுத்துள்ள ஒன்றுபட்ட நிலைப்பாட்டையும் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்துமாறு பரிந்துரை செய்துள்ள ஐ.நா மனித உரிமைச் சபை ஆணையாளரின் அறிக்கையினையும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஞா)

# எமக்கு எதிரான சர்வதேசத்தின் தீர்மானத்திற்கு பதில் வழங்க எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்

## சரத் வீரசேகரவின் வீராப்பு தொடர்கிறது



(கொழும்பு)

**ஜெனிவா எப்போதும் இலங்கைக்கு எதிராகவே இருந்து வருகிறது. 30/1 தீர்மானத்தின் இணை அனுசரணையிலிருந்து நாங்கள் விலகியதில் எங்களுக்கு நிம்மதி. இதனால் பல நாடுகள் எங்களுக்கு உதவி செய்ய வருகின்றன என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

நிகழ்வொன்றில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை 5 நாடுகள் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை கொண்டுவர உள்ளதாக அறிய முடிகின்றது.

நாம் அதற்கும் ஒரு பதிலை வழங்கவே எதிர்பார்த்து காத்திருக் கின் றோம்". மேலும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தொடர்புடைய 30 நபர்கள் மீது குற்றச்சாட்டுகளை பதிவு செய்ய தொடர்புடைய ஆதாரங்களை சட்டமா அதிபருக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தற்போது 251 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் பேராயர் கர்தினாலுக்கும் கத்தோலிக்க மக்களுக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. அவர்களுடைய தேவையை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

கொலைகள் மற்றும் சதித் திட்டங்கள் குறித்து 30 பேர் தொடர்பான தகவல்களை நாங்கள் சட்டமா அதிபருக்கு கொடுத்துள்ளோம்.

மேலும், ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை சட்டமா அதிபரிடம் சென்ற பின்னரே வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. நாங்கள் வழக்குத் தொட ங்கியதும், நீதிக்காக எவ்வாறு செயற்படுகிறோம் என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்" என அவர் தெரிவித்தார். (க-4)

# பொருளாதார தடை விதிக்காத வகையில் ஜெனிவா சவால்களை அரசு கையாளும்

## வெளிவிவகார அமைச்சர் தினேஷ்

(கொழும்பு)

இலங்கை அரசு மீது பொரு ளாதாரத் தடைகள் விதிக்கப் படாத விதத்தில் செயற்படக் கூடிய ஆற்றல் தற்போதைய அரசுக்கு இருக்கின்றது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரி வித்தார்.

"ஜெனிவா விவகாரத்தால் இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் வரக் கூடும். இதனால் பொருளாதாரம் பாதிக் கப்படக் கூடும் என்ற அச்சம் வர்த்தகர்கள் மத்தியில் இருக்கின்றது. இது தொடர்பில் தங்கள் கருத்து என்ன என்று? எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கையின் பொருளாதாரத்தில் கைவைப்பதற்கு சில மேற்குலக நாடுகள் முயற்சிக் கின்றன. அவ்வாறான நாடு களுக்கும், அங்குள்ள அமை ப்புகளுக்கும் யதார்த்த நிலைமை குறித்து எடுத்துரை க்கப்படும். அத்துடன், அவர்கள் அறிந்திராத பல தகவல்களை முன்வைப்பதற்கு இலங்கை யால் முடியுமாக இருக்கின்றது.

இலங்கையில் முற்போக்குச் சக்தி



யொன்று நாட்டை ஆளும் பட்சத்தில் தமது நாட்டுக்கு எதிரானவற்றை தோற் கடிப்ப தற்கே நடவடிக்கைகளை எடுத்துள்ளன. எனவேதான், எமக்கு ஏதோவொரு விதத்தில் அழுத்தங்களைக் கொடுப்பதற்கான முயற்சிகள் தொடர்கின்றன.

பொருளாதாரத்தடை, பொரு ளார வீழ்ச்சி ஆகியன குறித்து அறிவிப்புகள் வெளிவந்தாலும் அவை நடை முறைக்குவராத வகையில் பார்த்துக்கொள்ளக்கூடிய, செயற்படக்கூடிய ஆற் றல் இலங்கை அரசுக்கு இருக் கின்றது" எனவும் தெரிவித்தார். (க-4)

# தனியார் வைத்தியசாலை ஊழியர்களுக்கு அடுத்த வாரம் முதல் தடுப்பூசி வழங்கத்திட்டம்

(கொழும்பு)


தனியார் வைத்தியசாலைகளில் பணிபுரியும் வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கொவிட் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் புதன்கிழமை முதல் முன்னெடுக்கப்படும் என விசேட வைத்தியர் அமல் ஹர்ஷ த சில்வா தெரிவித்தார்.

பிரதான வைத்தியசாலைகளில் இந்த நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சாதாரண தனியார் வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியர்களுக்கு அருகில் உள்ள பிரதான வைத்தியசாலைகளில் இலவசமாக இந்த தடுப்பூசி வழங்கப்படும் எனவும் தெரிவித்தார். (க-4-8)

# மரண அறிவித்தல்

பிறப்பு
13
–
01
–
1943



இறப்பு
14
–
02
–
2021

## அந்தோனிமுத்து ஆசிர்வாதம்

**(ராசா அமலன்ஸ் வெதுப்பக உரிமையாளர்)**

மாத்தளனைப் பிறப்பிடமாகவும் இரணைப் பாலையை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனி முத்து ஆசிர்வாதம் (ராசா அமலன்ஸ் வெதுப்பக உரிமையாளர்) 14.02.2021 நேற்று காலமானார்.

இவரின் இறுதி நிகழ்வுகள் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 3 மணியளவில் புனித பற்றிமா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பற்றிமா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

(C-1438)

இரணைப்பாலை 077 592 7185 தகவல்:- குடும்பத்தினர்

# அடக்கம் தொடர்பிலான முடிவு சுகாதார அமைச்சரே எடுப்பார்

(கொழும்பு)

கொவிட்டினால் மரணமாவோரின் அடக்கம் தொடர்பில் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியே முடிவெடுப்பார் எனவும் அவர் தற்போது கொரோனாத் தொற்றுக்காக சிச்சிசை பெற்று வருவதாக முதன்மை சுகாதார நலன்துறை இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் அறிவித்தல் ஒன்றை விடுத்த பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கொவிட்டினால் உயிரிழந்தோரின் உடலங்கள் தகனம் செய்யப்படும் என்று தெரிவித்தார். எனினும் கால நிர்ணயம் எதனையும் வெளியிடவில்லை.

இந்த நிலையில் கொவிட் உடலங்களின் அடக்கம் தொடர்பாக தடையுத்தரவு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்த அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியே அந்த வர்த்தமானி தடையை நீக்கும் உத்தரவை விடுக்க வேண்டும் என்று பெர்னாண்டோபுள்ளே குறிப்பிட்டார். சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு இந்த தடையை நீக்குவதற்கான அதிகாரம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். எனவே தற்போதும் தகன முறையே தொடர்வதாக சுதர்ஷினிபெர்னாண்டோபுள்ளே மேலும் தெரிவித்தார். (க-4)

# அஷ்வின் கொடுத்தார் 'ரொப்பு' இங்கிலாந்து ஆனது 'பிளாப்பு'

## இந்தியா ஆதிக்கம் தொடர்கிறது



ரவி அஷ்வின்

திருப்பங்கள் நிறைந்த சென்னை ஆடுகளத்தில் அஸ்வின் பந்துவீச்சில் ஜொலிக்க இங்கிலாந்து அணி

முதல் இன்னிங்சில் 134 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்டில் தோற்ற இந்திய அணி 0-1 என தொடரில் பின் தங்கியுள்ளது. இரண்டாவது டெஸ்ட் சென்னை சேப் பாக்கம் மைதா னத்தில் நடக் கிறது.

முதல் நாள் முடிவில் இந் திய அணி முதல் இன் னிங்சில் 6 விக்கெட்டுக்களை இழந்து 300 ஓட்டங்களை எடுத்திருந்தது. ரிஷாப் பண்ட் (33), அக்சர் படேல் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ரிஷாப் அரைசதம்**

நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் நடந்தது. அக்சர் படேல் (5), இஷாந்த் (0) என இருவரும் மொயீன் அலி சுழலில் சிக்கினர். மறுபக்கம் உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரிஷாப் பண்ட், அரைசதம் எட்டினார். ஸ்டோன் பந்துகளில் குல்தீப் (0), மொஹமட் சிராஜ் (4) ஆட்டமிழந்தனர்.

இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 329 சகல விக்கெட்டுக் களையும் இழந்தது. ரிஷாப் பண்ட் (58) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் மொயீன் அலி 4, ஸ்டோன் 3, லீச் 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

**ஜோ ரூட் 'அவுட்'**

இங்கிலாந்து அணிக்கு முதல் இன்னிங்சில் பேர்ன்ஸ், சிப்லே ஜோடி ஆரம்பம் கொடுத்தது. இஷாந்த் வீசிய முதல் ஓவரின் மூன்றாவது பந்தில் பர்ன்ஸ் 'டக்' அவுட்டானார். சிப்லேவை (16) அஷ்வின் வெளியேற்றினார். பின் வந்த ஜோ ரூட், அக்சர் படேல் பந்தில் வழக்கம் போல 'ஸ்வீப் ஷொட்' அடிக்க முயற்சித் தார்.

ஜோ ரூட்டை (6), அஷ்வின் பிடி எடுத்து ஆட்டமிழக்கச் செய்ய இந்திய ரசிகர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். மீண்டும் மிரட்டிய அஷ்வின், இம்முறை லோரன்ஸை (9) வெளியேற்றினார். நேற்றுக் காலை போட்டி ஆரம்பத்தது முதல் உணவு இடைவேளை வரையிலான 2 மணி நேரத்தில் 8 விக்கெட்டுக்கள் சரிந்தன.

அடுத்து வந்த ஸ்ரோக்ஸ் 18, போப் 22, மொயீன் அலி 6 ஓட்டங்கள் எடுத்தனர். கடைசியில் பிரோட் (0) போல்டாக, இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 134 ஓட்டங்களுக்கு சுருண்டது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் அஷ்வின் 5 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

**சுப்மன் ஏமாற்றம்**

அடுத்து களமிறங்கிய இந்திய அணியின் சுப்மன் கில் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் நேற்றைய 2ஆம் நாளாட்டம் நிறைவுக்குவர இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்த 54 ஓட்டங்கள் எடுத்து, 249 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது. ரோகித் சர்மா (25), புஜாரா (7) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**குறைந்த ஸ்கோர்**

இந்தியாவில் டெஸ்ட் அரங்கில் தனது இரண்டாவது குறைந்தபட்ச ஸ்கோரை நேற்று இங்கிலாந்து (134/10) பதிவு செய்தது. இதற்கு முன் 1981, மும்பை டெஸ்டில் 102 ஓட்டங்களுக்கு சுருண்டது.

# தொடர் மே.தீவுகள் வசம் பங்களாதேஷ் ஏமாற்றம்




பங்களாதேஷுக்கு எதிரான 2ஆவது டெஸ்டிலும் அசத்திய மே.தீவுகள் 17 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றி கிண்ணத்தை வென்றது.

பங்களாதேஷ் சென்ற மே.தீவுகள் அணி, அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றது.

முதல் டெஸ்டில் மே.தீவுகள் வென்றது. இரண்டாவது டெஸ்ட் டாக்காவில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் மே.தீவுகள் 409, பங்களாதேஷ் 296 ஓட்டங்கள் எடுத்தன.

.நேற்று முன்தினம் 3ஆம் நாள் முடிவில் 2ஆவது இன்னிங்ஸில் மே.தீவுகள் அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 41 ஓட்டங்களை எடுத்திருந்தது. போனர் (8), வாரிகன் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த மே.தீவுகள் அணிக்கு வாரிகன் (2), கைல் மேயர்ஸ் (6), ஜெர்மைன் பிளாக்வுட் (9) ஏமாற்றினர். போனர் (38), ஜோஷுவா டா சில்வா (20) ஆறுதல் தர, 2ஆவது இன்னிங்ஸில் மே.தீவுகள் அணி 117 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஷனான் கேப்ரியல் (1) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பில் தைஜுல் இஸ்லாம் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

231 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பங்களாதேஷ் அணிக்கு தமிம் இக்பால் (50) நம்பிக்கை கொடுத்தார். சவுமியா சர்கார் (13), நஜ்முல் ஹொஸைன் ஷான்டோ (11), முஷ்பிகுர் ரஹிம் (14), மொஹமட் மிதுன் (10) ஏமாற்றினர். அணித் தலைவர் மொமினுல் ஹக் (26), மெஹிடி ஹசன் மிராஸ் (31), லிட்டன் தாஸ் (22) ஆறுதல் கொடுத்தனர்.

இரண்டாவது இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணி 213 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 17 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில் மே.தீவுகள் சார்பில் கார்ன்வால் 4, வாரிகன், கிரெய்க் பிராத்வைட் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

# தெ.ஆ.வெற்றி முரசு



5 விக்கெட்டுக்களைக் கொய்த தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியஸ்

தொடர் தோல்விகளால் துவண்டிருந்த தென்னாபிரிக்கா அணிக்கு பிரிட்டோரியஸின் வேகம் கைகொடுக்க இரண்டாவது 'ரி20' போட்டியில் தென்னாபிரிக்க அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தியது.

பாகிஸ்தான் சென்றுள்ள தென்னாபிரிக்க அணி, மூன்று போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் பாகிஸ்தான் வென்றிருந்த நிலையில் இந்நிலையில் 2ஆவது போட்டி அதே லாகூரில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணியின் தலை வர் கிளாசன் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

பாகிஸ்தான் அணிக்கு அணித் தலைவர் பாபர் ஆசம் (5), ஹைதர் அலி (10), ஹுசைன் தலாத் (3) ஏமாற்றினர். அபார மாக ஆடிய மொஹமட் ரிஸ்வான் (51) அரைச்சதம் கடந்தார். இப்திகார் அகமட் (20), பஹீம் அஷ்ரப் (30*) ஓரளவு கைகொடுக்க,

20 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 144 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் டுவைன் பிரிட்டோரியஸ் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு ஜேன்மேன் மாலன் (5), ஸ்முட்ஸ் (7) ஏமாற்றினர். பின் இணைந்த ரீசா ஹென்டிரிக்ஸ் (42), பைட் வான் பில்ஜோன் (42) நம்பிக்கை அளித்தனர். டேவிட் மில்லர் (25*), அணித் தலைவர் ஹெய்ன்ரிச் கிளா சன் (17*) ஜோடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றது.

தென்னாபிரிக்க அணி 16.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 145 ஓட்டங் கள் எடுத்து வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் சார்பில் ஷஹீன் ஷா அப்ரிடி 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனையடுத்து தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையை அடைந்தது.

# பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு அரசு அழுத்தம் கொடுக்கக்கூடாது



(கொழும்பு)

சம்பள நிர்ணய சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை வழங்குவதற் கான நடவடிக்கையை தொழில் அமைச்சர் முன்னெடுக்க வேண்டும்.

அதனைவிடுத்து கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுத்துக் கொண்டிருப்பது சம்பளப் பிரச்சினையை மேலும் இழுத்தடிக்கும் செயலாகவே அமையும் என்று அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் கிட்னன் செல்வராஜ் தெரிவித்தார்.

பண்டாரவளையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான முதலாவது கூட்டு ஒப்பந்தம் 1999 ஆம் ஆண்டிலேயே கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அப்போது உடன்படிக்கை 2002 இல் கைச்சாத்திடப்பட்டது. நாள் சம்பளமாக 121 ரூபா வழங்கப்பட்டது. கூட்டு ஒப்பந்தத்தில் உள்ள இல்வாறான விடயங்கள் இல்லாது செய்யப்படவேண்டும்.

கூட்டு ஒப்பந்தமானது தூரநோக்குடைய சிந்தனையில் அமைய வேண்டும்.

கூட்டு ஒப்பந்தம் இன்னும் அமுலில் உள்ளது. அதனைத் தொழிலாளர்களுக்குச் சாதகமான வகையில் நடைமுறைப்படுத்துவதற்கு தொழிற்சங்கங்கள் தவறியுள்ளன.

அதேவேளை பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் வழங்க வேண்டும் என சம்பள நிர்ணய சபை தீர்மானம் எடுத்துள்ளது.

இதுதொடர்பான வர்த்தமானி அறிவித்தலை அமைச்சர் விடுக்க வேண்டும்.

அத்துடன் பாராளுமன்றத்தில் தேவையான சட்டங்களை இயற்ற வேண்டும். அதனைவிடுத்து கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுப்பது சிக்கலாகவே அமையும்.

ஏனெனில் அரச இணக்கப்பாட்டுடனேயே பெருந்தோட்டங்கள், தனியார் கம்பனிகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றைத் திடீரெனக் கையகப்படுத்தினால் அதற்கெதிராக நீதிமன்றத்தை நாடக் கூடும்.

அது தொடர்பான கலந்துரையாடல் தற்போது இடம்பெறுகின்றது. அவ்வாறு நடைபெற்றால் அது சம்பளப் பிரச்சினையை இழுத்தடிக்கும் அபாயமுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-4-8)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்க முடிவு

(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை இன்று இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்தில், முன்வைப்பதற்கான வாய்ப்புள்ளதாக, அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையை பிரதியாக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார். அறிக்கையின் பிரதிகளை தயார் செய்ததன் பின்னர், விசேட அமைச்சரவைக் கூட்டம் ஒன்றை அழைத்து, இது குறித்து கலந்துரையாடவுள்ளதாக கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்தார்.

எனவே, அதனை பிரதியாக்குவதற்கு குறிப்பிட்ட காலம் எடுக்கக்கூடும்.

இந்த வாரம் அமைச்சரவையில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பத்திரங்களின் எண்ணிக்கை குறைந் தளவானது என்பதனால், அறிக்கை பிரதியாக்கப்பட்டிருந்தால், ஜனாதிபதி அது குறித்து கலந்துரையாடல் நடத்துவதற்கு பெரும்பாலும் வாய்ப்புள்ளதாக இருக்கும் எனவும் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். (4)

## பொதுச்செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் திலகராஜ்

(கொழும்பு)

தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் உயர்பீட உறுப்பினர் வைலட் மேரி, தொழிலாளர் தேசிய முன்னணியின் புதிய பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். தொழிலாளர் தேசிய முன்னணியின் மத்திய செயற்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் கூடியது.

இதன் போது இந்தத் தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டதாக தொழிலாளர் தேசிய முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார். (க-4-8)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1926.12.20

விண்ணில் 2019.03.10

திதி:-சதுர்த்தி பூர்வபக்கம்

கடந்த 10.03.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர் சுந்தரம் ஈஸ்வரதாஸ்

ஐயா,
நீங்கள் சிந்திய வியர்வைத் துளிகள்
எமது வீடுகளில் விளக்காய் எரியுதையா
எம் உயர்வுகள் ஒவ்வொன்றிலும்
உங்களது உயிர் நிலையாக வாழும்

உங்களது ஆத்மா சாந்தியடைய சாளம்பை முருகனை வேண்டுகின்றோம்

(5674)

கோட்டைக்காடு,
மல்லாகம்.

குடும்பத்தினர்


## பொலிஸ் பிரிவுகளில் இடம்பெறும் குற்றம் தொடர்பில் ஆராய குழு

(கொழும்பு)

பொலிஸ் பிரிவுகளில் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பில் கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு, விசேட குழுவொன்றை ஈடுபடுத்தவுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

சில பொலிஸ் உத்தியோகத்தர்களின் தவறான செயற்பாடுகள் தொடர்பில் மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விசேடமாக பொலிஸ் பிரிவுகளில் இடம்பெறும் சில சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காமை குறித்து கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பிலேயே முதலில் கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் வீரசேகர தெரிவித்தார். (க-4)

## 186,654 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

நாட்டில் இதுவரையில் ஒரு இலட்சத்து 86 ஆயிரத்து 654 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் நேற்று முன்தினம் மாத்திரம் 7 ஆயிரத்து 457 பேருக்கு கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி இலங்கையில் கொரோனா தடுப்பூசி போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-4)

## எதிர்வரும் நாட்களில் ஐரோப்பிய சுற்றுலாப்பயணிகளுக்கு அனுமதி

(கொழும்பு)

இலங்கைக்கு சுற்றுலா மேற்கொள்ள ஐரோப்பிய நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொவிட் தடுப்பு நடவடிக்கைக்காக மேற்கொண்டுள்ள விசேட செயற்பாடுகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அதற்கமைய எதிர்வரும் நாட்களில் இத்தாலி, ஜேர்மன் உட்பட பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளிநாட்டுப் பயணிகள் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளனர்.

சுற்றுலாத்துறையினால் இலங்கைக்கு கிடைத்த மிகப் பெரிய வருமானத்தை நாங்கள் இழந்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (க-4)

# குடிநீர் கிணறுகளை புனரமைக்குமாறு மக்கள் வேண்டுகோள்

(வரணி)
வரணி மாசேரி கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள குடிநீர்க் கிணறுகள் நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமல் காணப்படுகின்றன.

குறிப்பாக மாசேரி வயல் வெளி கிணறு, முள்ளாவெளி சங்கானைக் கிணறு, விளா மோட்டை குடிநீர்க் கிணறு போன்றவையாகும்.

இவை கிராமமக்கள் தினமும் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்தும் பொதுக்கிணறுகளாகும்.

இக்கிணறுகள் நிலமட்டத்துடன் காணப்படுவதால் விலங்குகள் தவறிவிழுவதனால் குடிநீருக்கு மக்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

இதனால் அடிக்கடி கிணற்றினை துப்புரவு செய்ய வேண்டியுள்ளதாகக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

வறட்சியான காலங்களிலும் இக்கிணறுகளின் நீர் மட்டம் குறைவடைவதில்லையென மக்கள் தெரிவிப்பதுடன் கிராமமக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் இப்பொதுக் கிணறுகளை புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கிராமமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (5-4-103)

# பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை பேரணி ஏற்பாட்டுக் குழுவுடனான சந்திப்பு

(குப்பிழான்)
அரசின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறைகளுக்கு எதிராக அண்மையில் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை முன்னெடுக்கப்பட்ட அகிம்சை ரீதியிலான மாபெரும் பேரணியின் வடமாகாண ஏற்பாட்டுக் குழுவினருக்கு நன்றி தெரிவிக்கும் சந்திப்பும் கலந்துரையாடலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள தந்தை செல்வா கலையரங்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு- கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களின் இணைத்தலைவர் தவத்திரு. வேலன் சுவாமிகள் மற்றும் மேற்படி பேரணி ஏற்பாட்டுக் குழுவின் வடமாகாண இணைப்பாளர் எஸ்.சி.சி இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்து ரையாடலில் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த ஏற்பாட்டுக் குழுவைச் சேர்ந்த சுமார்நாற்பதுக்கும்மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு- கிழக்கு சிவில் சமூக அமைப்புக்களின் இணைத் தலைவரும், மட்டக்களப்பு மாவட்ட சிவில் ஒன்றியங்களின் தலைவருமான எஸ். சிவயோகநாதன் zoom தொழில்நுட்பம் மூலம் இணைந்து கொண்டார்.

குறித்த கலந்துரையாடலில் நடந்து முடிந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மாபெரும் பேரணி தொடர்பான அனுபவங்கள் பகிரப்பட்டதுடன் கலந்து கொண்ட அனைவருக்கும், ஏற்பாட்டுக் குழுவினருக்கும் நன்றிகளும் தெரிவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் தமிழ்மக்களின் போராட்டங்களை வலுச் சேர்ப்பதற்குத் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும், முன்னெடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது. (க-5-4-18)

# விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)
உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி விசேட பூஜைகள் இடம்பெற்று வருகின்றன.

நாளை 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு சுன்னாகம் கந்தரோடை கோட்டம் கட்டுஞான வைரவர் கோவிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் கோவிலின் பிரதம குருக்கள் பிரம்ம ஸ்ரீ சா.கோபாலசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம் பெறவுள்ளன.

இந் நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் ஆலய தரிசனம் நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு ஒலிபரப்பு செய்யப்படும். (5-4)

# பிரதேச மலருக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியீடு செய்யப்படும் பிரதேச மலரான " திருவுடையாள் பிரதேச மலர் 08" இற்கான கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.

இக்கட்டுரைகள் வடமராட்சிப் பிரதேசத்தின் கலை, கலாசாரம், சமூகம், வரலாறு, தொல்லியல், பொருளாதாரம், விவசாயம் சார்ந்த விடயங்களாக இருப்பதுடன் கட்டுரைகள் யாவும் ஏ-4 தாளில் பாமினி Font இல் 12 அளவில் தட்டச்சு செய்யப்பட்டு வன் பிரதியாகவும் மென் பிரதியாகவும் மார்ச் 13 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் நேரடியாக அல்லது மின்னஞ்சல் ஊடாகவோ அல்லது தபால் மூலமாகவோ ஒப்படைக்க வேண்டும்.

தாமதமாகக்கிடைக்கப்பெறும் கட்டுரைகள் யாவும் தெரிவுக் குழுவினால் நிராகரிக்கப்படும் என்பதுடன் தெரிவுக்குழுவினால் தரமான கட்டுரைகளாகத் தெரிவு செய்யப்படும் கட்டுரைகள் மட்டுமே "திருவுடையாள் பிரதேச மலர்-08" பிரசுரிக்கப்படும்.

என பிரதேச செயலாளரும் கலாசாரப் பேரவைத் தலைவருமான ஈ. தயாரூபன் தெரிவித்துள்ளார். (5-4)

# மஹோற்சவம்

(குப்பிழான்)
ஊரெழு மடத்துவாசல் சுந்தரபுரி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 6 மணியளவில் சப்பறத் திருவிழாவும், 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7மணியளவில் இரதோற்சவமும்,27ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணியளவில் தீர்த்தோற்சவமும், அன்றைய தினம்மாலை 5 மணியளவில் கொடியிறக்க உற்சவமும் நடைபெறவுள்ளன.(5,4,18)

# ஏக்கர் வரி அறவிடும் வாரம் கமநல திணைக்களத்தால் அறிவிப்பு

(கரணவாய்)
வயற்காணிகளுக்கு 2021 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி அறவிடப்படவுள்ளன.

ஏக்கர் வரி வாரம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் தேசிய ரீதியாக எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

எனவே யாழ்.மாவட்ட விவசாயிகள் அனைவரும் தங்களது கமநல சேவை நிலையங்களை தொடர்பு கொண்டு தங்களது வயல் காணிகளுக்கு ஏக்கர் வரியினைச் செலுத்துமாறு யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களம் அறிவித்துள்ளது. (5-4-60)

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்தனர்

(சாவகச்சேரி)
கடந்த மாதம் கட்டார் நாட்டில் இருந்து இலங்கை வந்த 237 பேர் தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை தமது வீடுகளுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 30ஆம் திகதி கொடிகாமம்-விடத்தற்பளை தனிமைப்படுத்தல் முகாமில் அனுமதிக்கப்பட்டவர்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். (5-4-30)




# பின்லா செயற்றிட்டத்தின் மூலம் கழிவுகளால் ஆதாயம் தேடல்


(சாவகச்சேரி)
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் முன்னெடுக்கப்பட்டு வரும் கழிவு முகாமைத்துவத்தினை பேணுவதற்கான "பின்லா செயற்திட்டம்" தொடர்பாக கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையுடன் வேள்ட் விஷன், செவனத்த மற்றும் ஜேர்மன் நிறுவனம் ஆகியன இணைந்து கழிவுகள் அற்ற பாதுகாப்பான நகரை உருவாக்கும் முனைப்பில் "பின்லா செயற்றிட்டம்" நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. குறித்த செயற்றிட்டம் இலங்கையில் ஜாஎல, வத்தளை பிரதேச சபைகள் மற்றும் சாவகச்சேரி நகரசபை ஆகிய சபைகளில் கடந்த வருடம் தொடக்கம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பின்லா செயற்றிட்டம் ஊடாக சாவகச்சேரி நகர சபைக்கு 20 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட விருப்பதாகவும், இச் செயற்றிட்டம் ஊடாக கழிவுகள் மூலம் ஆதாயத்தை தேடி வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம் படுத்த முயல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பின்லா செயற்றிட்ட அதிகாரிகள் கழிவு முகாமைத்துவம் மற்றும் பின்லா திட்டம் தொடர்பான விளக்கத்தை நகரசபை உறுப்பினர்களுக்கு வழங்கியிருந்தனர்.

நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை தவிசாளர், செயலாளர், உறுப்பினர்கள் மற்றும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் உள்ளிட்டோர் பங்குபற்றினர். (5-4-30)



பருத்தித்துறை பிரதேச சபை மற்றும் இலங்கை மின்சார சபையின் அனுமதியோடு புலம்பெயர் தேசத்து எமது உறவுகளின் நிதிப்பங்களிப்புக்களோடும், குடத்தனை வடக்கு சமூக சேவைகள் ஒன்றியத்தின் நெறிப்படுத்தலில், குடத்தனையில் தெரு மின்விளக்குகள் மீள திருத்தப்பட்டதுடன் புதிய மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

# அமைச்சர் சரத் வீரசேகர மோசமான இனவெறி சிந்தனைக்குள் புதைந்துள்ளார்

## கஜேந்திரன் எம்.பி.காட்டம்



(கொழும்பு)

**தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை நசுக்கும் விதமாகவே சரத் வீரசேகரவின் செயற்பாடுகள் காணப்படுகின்றதென அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் விடுதலைப் புலிகள் மற்றும் பிரபாகரன் குறித்து பேசுவதற்கு இனி ஒருபோதும் அனுமதிக்க முடியாதென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இந்நிலையில் சரத் வீரசேகரவின் கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் பி.பி.சி.செய்தி பிரிவுக்கு கஜேந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது,

"அமைச்சர் சரத் வீரசேகர, மோசமான இனவெறி சிந்தனைக்குள் புதைந்துள்ளார்.

ஆகவேதான் இவ்வாறான கருத்துகளை அவர் வெளியிட்டு வருகின்றார். இலங்கையில் 30 வருட காலம் இடம்பெற்ற யுத்தத்தின் போது, தமிழர்கள் மீது இலங்கையின் முப்படைகளே தாக்குதல்களை நடத்தியது.

ஆகவேதான் இலங்கை அரச படைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் மீது யுத்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. அதனை சரத் வீரசேகரவும் எதிர்கொள்ள வேண்டும்.

இதேவேளை தமிழ் மக்களுக்காக போராடி உயிர் நீத்தவர்களை நினைவுகூர்வதை தடுப்பதற்கும் தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளை நசுக்குவதற்காகவுமே சரத் வீரசேகர இவ்வாறான திட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றார்.

இது ஜனநாயக விரோத செயற்பாடாகும். அவ்வாறான சட்டமூலம் கொண்டு வரப்படும் பட்சத்தில் அதற்கு எதிராக நாம் செயற்படுவோம்.

இவ்வாறான செயற்பாடொன்றை இலங்கை அரசாங்கம் செய்யும் பட்சத்தில் சர்வதேசத்திற்கு முன்பாக தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டிய நிலைமை ஏற்படும்" என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (க-4)


## JOB வேலை வாய்ப்புகள்

### வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கி வரும் யாழ்.ஐஸ்கிறீம் மற்றும் யாழ்.அசைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்க்காணும் வேலைக்கு ஆட்கள் தேவை. தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

- ஐஸ்கிறீம் மற்றும் ஜூஸ் வகைகள் வேலை தெரிந்தோர். அனுபவத்திற்கும் திறமைக்கும் ஏற்ப 30,000/= +கூடுதல் நேர கொடுப்பனவு.
- யாழ்.வகை அசைவ உணவுகள் நன்கு சமைக்கத் தெரிந்தவர்கள் திறமைக்கு ஏற்ப 45,000/= +கூடுதல் நேர கொடுப்பனவு.
- மோட்டார் சைக்கிள்/ஆட்டோ ஓடக்கூடிய உதவியாளர்கள். 30,000/= +மேலதிக நேர கொடுப்பனவு.

**உடன் தொடர்பு கொள்ளவும்:-**

**ராஜன் - 076 886 6972**

(5676)


## சீனாவின் மத்திய வங்கியுடன் உடன்படிக்கை செய்யவுள்ள இலங்கை

(கொழும்பு)

இலங்கை, சீன மத்திய வங்கியுடன் அடுத்த வாரத்தில் உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்ளவுள்ளது.

சீனாவின் மத்திய வங்கியுடன் 1.5 பில்லியன் டொலர்கள் மதிப்பிலான உடன்படிக்கை செய்துகொள்ளப்படவுள்ளது.

ஏற்கனவே இந்த தொகையை இந்தியாவிடம் இலங்கை எதிர்பார்த்தபோதும் அது கிடைக்காது என்ற அடிப்படையிலேயே சீனாவுடன் இந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்படவுள்ளது.

இந்த நிதியின் மூலம் வெளிநாட்டு ஒதுக்கங்கள் மற்றும் சீனாவில் இருந்து இறக்குமதிகளை உரிய வகையில் செயற்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நிதி மூன்றரை வருடகாலத்தில் மீண்டும் செலுத்தப்படவுள்ளது. நாணய மாற்று பரிமாற்றத்துக்காக இந்தியாவின் மத்திய வங்கியிடம் ஒரு பில்லியன் டொலர்களை இலங்கை எதிர்பார்த்தது.

எனினும் அது கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்ற அடிப்படையிலேயே சீனாவிடம் இது தொடர்பான கோரிக்கை விடுக்கப்பட்டது. (க-4)

## மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய இந்திய அரசு விருப்பம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை அபிவிருத்தி செய்ய விருப்பம் தெரிவித்து இந்தியா இலங்கைக்கு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளதாக நம்பகமான இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இதன்படி இந்திய அரசாங்கத்தின் சார்பாக தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் இந்த செய்தியை இலங்கைக்கு அனுப்பி வைத்துள்ளதாக இந்திய தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்துக்கு பதிலாக மேற்கு முனையத்தை பராமரிக்கவும் அபிவிருத்தி செய்யவும் இந்தியா ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் அதானி மற்றும் அவர்களின் உள்ளூர் பங்குதாரர் ஏற்கனவே இது தொடர்பில் அனுமதி அளித்துள்ளனர். இந்திய அரசின் வெளிநாட்டு முதலீட்டு பங்காளியான ஜப்பானுடனும் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இந்தப் பேச்சு வெற்றிகரமாக முடிவடையும் எனத் தூதரகம் கூறுகிறது. (க-4)


### பதவி வெற்றிடங்கள்

வடக்கு மாகாண சபையின் சமூகசேவைகள் திணைக்களத்தின் கீழ்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2021

1. "சாது சேவிகா" தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021
2. சமூகசேவை உத்தியோகத்தர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021
3. சைகை மொழிபெயர்ப்பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலம் மேற்படி பதவிகளுக்குரிய போட்டிப் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது. இப் பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலம் நிரப்பப்படும். இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2021.03.05 ஆகும்.

விண்ணப்பதாரிகள் **www.np.gov.lk→Recruitment and Exam→Advertisement** என்ற வடக்கு மாகாண இணையத்தளத்திலும் மற்றும் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட உள்ளூராட்சிமன்ற அலுவலகங்களிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் தொடர்பான விபரங்களை பார்வையிட்டு தகைமையுடையவர்கள் அம் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**சி.திருவாகரன்**
**செயலாளர்,**
**மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**
**15.02.2021**

(C-1421)

### கடை வாடகை தொடர்பானது

கோப்பாய் தெற்கு, பருத்தித்துறை வீதியிலுள்ள கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான கீழ்த்தளத்திலுள்ள கட்டடங்கள் 02 (21' நீளம் 10' அகலம்) வாடகைக்கு விடப்படும். தேவையானோர் சங்கத்தில் விண்ணப்பப் பத்திரத்தை பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 25.02.2021 ஆம் திகதிக்கு முன்னராக "**தலைவர், கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**'' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தலைவர், ப.தெ.வ.அ.கூ.ச.,கோப்பாய்.**

(C-1419)

# தேவநம்பியதீசன் காலத்திற்கு முன்பே இலங்கையில் சிவலிங்க வழிபாடு இருந்தது

## பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் காட்டம்



(கிளிநொச்சி)

தேவநம்பியதீசனின் காலத்தின் பின்னரே இலங்கைக்கு பெளத்த மதம் வந்தது. தமிழர்களே இந்த மண்ணின் பூர்வீகக் குடிகள் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வாதரவத்தை பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் இந்த மண்ணிலே நாளுக்கு நாள் வெவ்வேறான பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றோம். பொழுது விடிவதே எங்கள் மக்களின் நிலங்களையும் வாழ்வையும் அரச இயந்திரங்கள் கபளீகரம் செய்கின்ற செய்திகளுடனே தான். தொல்லியல் என்ற பெயரில் எங்கள் தொன்மங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சிவலிங்க வழிபாடு மேற்கொண்ட இடங்களை எல்லாம் புத்தர் சிலை இருந்தது எனக் கூறி எங்கள் வழிபாட்டு உரிமையை கேள்விக்கு உள்ளாக்குகிறது. எங்கள் கலாசார, பண்பாட்டு, விழுமியங்கள், நவநாகரிகம் என்ற பெயரில் இல்லாமல் போகிறது.

இளைஞர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகிறார்கள். இந்த நாட்டின் முப்படைகளும் ஆயுதங்களோடு வடக்கு-கிழக்கில் தமிழ் மக்களின் காணிகளை சுவீகரித்து வைத்திருக்கின்றனர்.

எந்த இடத்திலும் இல்லாதவாறு தமிழர்களின் இடங்களில் ஆயுதப்படைகள் குவிக்கப்பட்டிருக்கின்ற நிலையிலும் எவ்வாறு போதைப்பொருள் இளைஞர்களுக்கு கிடைக்கிறது.

எமது இளைஞர்கள் இனம் பற்றி சிந்திக்கக் கூடாது என்ற நோக்கில் எங்கள் இளைஞர்களை வேறு திசைகளுக்கு திருப்புகின்ற செயற்பாடுகள் கனகச்சிதமாக திட்டமிட்டு செய்யப்படுகிறது.

இலங்கைக்கு பெளத்த மதம் என்பது தேவநம்பியதீசன் காலத்திலே தான் வந்தது. தேவநம்பியதீசன் காலத்திற்கு முன்பாக ஆண்ட மன்னர்கள் எல்லோரும் இந்துப்பண்பாட்டுடன் தான் ஆண்டிருக்கிறார்கள்.

தமிழ் மன்னர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள் என்பதைக்கூட பாடப்புத்தகங்களில் இணைக்க சிங்கள கல்வித்துறை தயாராக இல்லை. பண்டாரவன்னியன், கையிலை வன்னியன், சங்கிலியன், பல்லவன், அக்கிராசன் போன்ற மன்னர்கள் ஆண்டார்கள் என்பதைக்கூட வரலாற்றுப் புத்தகத்தில் போடுவதற்கு தயாராக இல்லை.

இதனால் தான் பிரபாகரன் தமிழீழ கல்வி கழகத்தின் பொறுப்பாளர் பேபி சுப்பிரமணியம் ஊடாக தமிழீழ வரலாறு என்னும் பாடம் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டது. திருமூலர் இலங்கையை சிவபூமி என்று அழைப்பதன் மூலமே தெளிவாகிறது. சிவவழிபாடு மிகச் சிறந்த முறையில்.இங்கு நடைபெற்றிருக்கிறது என்பது தேவநம்பியதீசனின் தந்தை கூட மூத்த சிவன் என்பதுதான். சிவன் என்பது தமிழர்களின் கடவுளின் பெயரையே குறிக்கிறது.

தீசன் சிவன் போன்ற பெயர்கள் இப்போதும் தமிழர்கள் மத்தியில் இருக்கிறது. ஆனால் இதில் இருந்தே தெளிவாகிறது இந்த நாட்டினுடைய வரலாறு எவ்வாறு திரிபுபடுத்தப்படுகிறதென்று அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# ஆற்றல் குழுமத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

(அக்கராயன்)

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் ஆற்றல் குழுமம் மீள் உருவாக்கல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 12 ஆம் திகதி நடைபெற்றது.

அக்கராயன் கிராம உத்தியோகத்தர் ப.சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கரைச்சி கலாசார உத்தியோகத்தர் அ.ஞானசீலன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் சு.தயாபரன் தலைமையில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. அதில் தலைவராக செ.திபோதனும் உபதலைவராக ச.சுஜிவனும் செயலாளராக க.பரமேஸ்வரனும் உபசெயலாளராக திருமதி. இ.சாந்தகுமாரியும் பொருளாளராக து.நவரட்ணஜோதியும் தெரிவு செய்யப்பட்டனர்.

மற்றும் உறுப்பினர்களாக ஆ.வேலு, அ.றொசானி, டினேஸ், ச.வினோதன், செ.ருபாஸ்கர், தாரகன், நிதர்சன், நா.சபாநாயகம் ஆகியோருடன் கணக்காய்வாளராக சி.சிறிதரன் மற்றும் போசகர்களாக ப.சபாரத்தினம், த.நிரஞ்சலன் ஆகியோரும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் குழுமத்தின் புதிய யாப்பும் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஸ்கந்தபுரத்தில் ஆற்றல் குழுமம் செயற்பட்டு கலை, இலக்கிய, பண்பாட்டுச் செயற்பாடுகளை இப்பிரதேசத்தில் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-350)



யாழ்ப்பாணம் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் கிளி.அக்கராயன் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 10 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

(படம்:-கிருஷ்ணகுமார்)

# அனுமதியின்றி மணல் அகழ்வு

## இரண்டு பேர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பகுதியில் சட்ட விரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இருவர் நேற்று முன்தினம் டிப்பர்களுடன் கைது செய்யப்பட்டனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நடவடிக்கை மேற்கொண்ட பொலிஸார் கல்லாற்றுப் பகுதியில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு சாரதிகள் கைது செய்யப்பட்டதுடன் அவர்களின் இரண்டு டிப்பர்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.




கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் விசாரணைகளின் பின் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என தருமபுரம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி செனவரட்ன தெரிவித்தார். (5-4-316)

# மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழா







(மன்னார்)

மன்னார் மாவட்டத்தின் வரலாற்று சிறப்பு மிக்க மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 150 ஆவது ஆண்டு நிறைவு யூபிலி விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை பாடசாலையில் வெகு விமரிசையாக இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாடசாலையின் அதிபர் அருட்சகோதரர் ரெஜினோல்ட் தலைமையில் யூபிலி நிறைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, அமலமரி தியாகி சபையின் மாகாண தலைவர் அருட்பணி இயூஜின் பெனடிக்ற், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஏ.விக்டர் சோசை, வடமாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் லெம்பேட், வட மாகாண கல்வி திணைக்கள பணிப்பாளர் எஸ்.உதயகுமார், மன்னார் கல்விப் பணிப்பாளர் கே.ஜே.பிரட்லி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வில் பாடசாலையின் ஆரம்ப உருவாக்கத்திற்கு உதவிய சபைகள் மற்றும் நபர்களின் பெயரில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டதோடு, 150 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு அமைக்கப்பட்ட நினைவுத் தூபி மற்றும் நுழைவாயில் தொகுதியும் திறந்து வைக்கப்பட்டன.

அத்துடன் கனடா மற்றும் அமெரிக்காவில்வசிக்கும்பழைய மாணவர்களினால் வழங்கப்பட்ட அதி நவீன வசதிகள் கொண்ட பெறுமதியான 5 வினைத்திறன் வகுப்பறைகளும் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டு, நிகழ்வுகள் இடம்பெற்றதோடு பாடசாலை யூபிலி நூல் வைபவ ரீதியாக வெளியிடப்பட்டது. (5-4-285)

# இராசிபலன்

15.02.2021
மாசி 03, திங்கட்கிழமை
சதுர்த்தி பின்னிரவு 4.24 மணிவரை
உத்திரட்டாதி முன்னிரவு 7.23 மணிவரை
சுபநேரம் 12.33-2.03 மணிவரை
இராகுகாலம் 8.03-9.33 மணிவரை
சந்திராஷ்டமம்:- மகம், பூரம்
சதுர்த்தி விரதம்

வளவன்



மேஷம்

கொடுக்கல்-வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.



ரிஷபம்

பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.



மிதுனம்

நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உங்களின் திறமை வெளிப்படும் நாள், போசன சுகமுண்டு.



கடகம்

உடல் நலன் சீராகும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



சிம்மம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.



கன்னி

பொறுமையால் பெருமை சேரும் நாள், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.



துலாம்

பொதுவாழ்வில் புகழ் கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், செய்தொழில் மேன்மையுண்டு.



விருச்சிகம்

இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.



தனுசு

வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் மனம் மாறுவர், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.



மகரம்

விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், ஆரோக்கியம் சீராகும், சகோதர வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.



கும்பம்

நன்மைகள் நடைபெறும் நாள், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்.



மீனம்

வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

அதிக விலைக்கு விற்றாலும் எடையை குறைக்காதே

# ஜெனிவாவில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள்
# அரசியல் நோக்கங்களைக் கொண்டவை

**(கொழும்பு) இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது என்பதை ஆதாரபூர்வமாக நிரூபிப்போம் என பிராந்திய உறவுகள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சர்வதேச நாடுகளுடன் இலங்கை பொதுவான வெளிவிவகார கொள்கையினை பேணுகிறது. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் ஒவ்வொரு வருடமும் பாரிய நெருக்கடிகளை ஏதாவதொரு வழிமுறையில் எதிர்கொள்கிறது. 2014 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட அரசாங்கம் ஜெனிவா விவகாரத்தை சிறந்த முறையில் கையாண்டது.

2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கை தொடர்பான ஜெனிவா விவகாரம் அரசியல் மயப்படுத்தப்பட்டது. அரசியல் பழிவாங்கலுக்கு இராணுவத்தினருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள்



ஆயுதமாக பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதிகளில் இலங்கை சர்வதேச அரங்கில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டது. இதற்கு நல்லாட்சி அரசாங்கத்தின் பலவீனம் பிரதான காரணியாக அமைந்தது.

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் கொண்டு வரப்பட்ட 30/1 பிரேரணைக்கு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அரச தலைவருக்கும் பாராளுமன்றத்துக்கும் அறிவிக்காமல் இலங்கை அரசாங்கம் குறித்த பிரேரணைக்கு இணை அனுசரனை வழங்குவதாக இணக்கம் தெரிவித்தமை தேசத்துரோக செயற்பாடாகவே கருத வேண்டும்.

நாட்டுக்கு எதிராக பிரேரணைகளில் இருந்து அரசாங்கம் வெளியேறும் என ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவித்தார். இதன் பிரகாரமே கடந்த வருடம் பெப்ரவரி மாதம் இடம் பெற்ற கூட்டத்தொடரில் 30/1 பிரேரணையில் இருந்து அரசாங்கம் விலகியது. இம்முறை இடம்பெறவுள்ள கூட்டத்தொடரில் இலங்கையினை நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இம்முறை தீர்க்கமான தீர்மானங்கள் எடுக்கப்படும். பலம் வாய்ந்த நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக செயற்படும். அனைத்து நெருக்கடிகளுக்கும் இம்முறை தீர்வு காண முடியும் எனத் தெரிவித்தார். (க-4)

# இம்ரான்கானின் இலங்கைக்கான விஜயம் இந்திய அரசாங்கத்திற்கு எதிரானதா?

## இராதாகிருஷ்ணன் கேள்வி



(ஹற்றன்)

எதிர்வரும் 22 ஆம் திகதி இலங்கைக்கு வருகின்ற பாக்கிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் இலங்கைக்கான விஜயம் இந்திய அரசாங்கத்திற்கு எதிரானதாக அமைந்து விடக்கூடாது.

அப்படி அமைந்து விடுமோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தற்பொழுது இலங்கையில் இந்தியாவிற்கு எதிரான ஒரு நிலைப்பாடு ஏற்பட்டுள்ளது. அதற்குக் காரணம் கொழும்பு துறைமுகம் தொடர்பாக ஏற்பட்டுள்ள முறுகல் நிலையாகும். ஏற்கனவே இந்திய அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு தயாராக இருந்த நிலையில் இலங்கையில் ஏற்பட்ட பல்வேறு தரப்பினரின் இந்திய எதிர்ப்பு போராட்டம் காரணமாக இந்த தீர்மானம் கைவிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தற்பொழுது இந்தியா தொடர்பாக இலங்கையில் பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறான ஒரு நிலையில் பாகிஸ்தான் பிரதமரின் இலங்கைக்கான திடீர் விஜயம் பல கேள்விகளை எழுப்புகின்றன.

பாகிஸ்தான் பிரதமரின் இலங்கை விஜயமானது இந்தியாவிற்கு எதிரானதாக அமைந்து விடக்கூடாது. ஏனெனில் இந்தியா என்பது எமது குடும்பத்தில் ஒருவர் போல பல்வேறு இக்கட்டான சந்தர்ப்பங்களிலும் இந்தியாவின் உதவி எமக்கு கிடைத்துள்ளது.

எனவே இந்தியாவை நாம் நேரடியாகவோ மறைமுகமாகவோ பகைத்துக் கொள்வது என்பது பிழையான ஒரு அரசியல் நகர்வாகும்.

ஏனெனில் தொடர்ந்தும் நாம் இந்தியாவுடன் நல்லுறவுடன் பயணிக்காவிட்டால் அது எமக்கு பொருளாதாரம் உட்பட இன்னும் பல வழிகளிலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்த விடயங்கள் அனைத்தையும் நாம் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். பாகிஸ்தான் பிரதமரின் விஜயம் இந்தியாவிற்கு எதிரானதாக அமைந்து விடக்கூடாது.

இன்றைய இந்த சூழ்நிலையில் அவருடைய விஜயமானது பொருத்தமற்ற ஒரு விடயமாகவே கருத வேண்டியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (க-4)



# சிறுவர் அரங்கம்

## கெட்டிக்காரன் புளுகு

ஒருநாள் காலையில் ஒரு மரத்தின் மீது சேவல் உட்கார்ந்து இருந்தது. காலை நேரம் ரம்மியமாக இருந்தபடியால் உற்சாகமாய் சேவல் கூவியது. பலதடவை கூவியது.

இதைக் கேட்ட நரி அங்கே வந்தது. நரிக்கு சரியான பசி இருந்தது. அந்த சேவலை பிடித்து சாப்பிட ஆசைப்பட்டது.

ஆனால் சேவல் மரத்தின் மீது இருந்தபடியால் அதைப் பிடிக்க முடியவில்லை. இதற்காக ஒரு தந்திரம் செய்ய நினைத்தது.

உடனே சேவலைப் பார்த்து, "சகோதரனே!, வணக்கம். ஒரு நல்ல செய்தியை நீ கேள்விபட்டாயா? பறவைகளுக்கும், மிருகங்களுக்கும் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இனி ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக் கொள்ளக் கூடாது.

அன்பாய் நடந்து கொள்ள வேண்டும். சகோதர மனப்பான்மையை வளர்க்க வேண்டும். நீகொஞ்சம்கீழேவாயேன். இந்த நல்ல செய்தியைப் பற்றி பேசுவோம்" என்றது.

நரியின் தந்திரப் பேச்சைச் சேவல் புரிந்து கொண்டது. அதை வெளியே காட்டவில்லை. தூரத்தில் எதையோ பார்ப்பதைப் போல் தலையைத் தூக்கிப் பார்த்தது.

இதைக் கண்ட நரி, என்ன சகோதரா!, ரொம்ப அக்கறையாக எதையோ அடிக்கடி பார்க்கிறாயே. அங்கே என்ன இருக்கிறது? என்று கேட்டது.

அதற்கு சேவல், அங்கே சில வேட்டை நாய்கள் வருவது மாதிரி தெரிகிறது. வேட்டை நாய்கள் தானா என்பதைக் கவனிக்கிறேன் அவ்வளவு தான் நரிக்கு உடல் நடுங்கி விட்டது. வேக வேகமாக "சரி, சரி நான் அப்புறமாக வந்து உன்னிடம் பேசுகிறேன்" என்று கூறி கிளம்பியது.




சேவல், "அருமை சகோதரா, போகாதே. நான் இதோ கீழே வருகிறேன். நாய்களைக் கண்டு ஏன் பயப்படுகிறாய்? இப்பொழுது தானே நீ சொன்னாய், எல்லோருக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது"

நரி "அந்த ஒப்பந்தத்தைப் பற்றி அநேக பேர் கேள்விப் பட்டிருக்கமாட்டார்கள். அந்த நாய்களுக்கு தெரியாமல் இருந்தால், நான் என்ன கதி ஆவது? நான் போகிறேன்". இதைச் சொல்லி விட்டு நரி ஒரே ஓட்டமாக ஓடி காட்டுக்குள் மறைந்தது.

சேவல் "யாரிடம் ஏமாற்றப் பார்க்கிறாய். உன்னுடைய கெட்டிக்கார பொய்கள் என்னிடம் பலிக்காது" என்று கூறிச் சிரித்தது. கெட்டிக்காரன் புளுகினாலும் அது புத்திசாலியிடம் வெளிப்பட்டு விடும்.

## மகா அலெக்சாண்டரின் வரலாறு

### சிரஞ்சீவி அலெக்சாண்டர்




இப்போது புருஷோத்தமரை வீழ்த்தியிருக்கிறோம். அந்தப் பயத்திலேயே ஏராளமான மன்னர்கள் நம்மிடம் சரணடையத் தயாராக இருக்கிறார்கள்.

இதற்கெல்லாம் யார் காரணம்? நீங்கள். நீங்கள் மட்டும்தான் காரணம். வெற்றிகள் நம்மை வரவேற்கின்றன. வாருங்கள் போகலாம். என்ன தயாரா?

அரசே! தாமே விரும்பி சரணடைபவர்களை மட்டுமே இனி நம்மால் எதிர்கொள்ள முடியும்.

ஆனால் புருஷோத்தமர் போன்றவர்களுடன் போரிட உடலும் மனமும் இடம் கொடுக்கவில்லை. வீரர்கள் சார்பாக சில தளபதிகள் பேசினார்கள்.

சரி, உங்கள் நிலையை ஏற்றுக் கொள்கிறேன். இப்போதைக்கு ஜீலம் நதியைத் தாண்டி முன்னேற வேண்டாம். அக்கம் பக்கத்தில் இருக்கும் நாடுகளைக் கைப்பற்ற முயற்சி செய்வோம்.

நிம்மதியாக இருந்தது வீரர்களுக்கு. அலெக்சாண்டர் நினைத்தபடியே சில மன்னர்கள் தாமாக ஓடிவந்து கிரீடத்தைக் கழற்றி அலெக்சாண்டரின் பாதங்களில் வைத்து வணங்கினார்கள். இவர்களில் இளைய புருஷோத்தமனும் ஒருவர். அண்ணனைப் போல அல்லாமல் கோழைத்தனத்தின் மொத்த உருவம் அவர்.

சில மாதங்கள் ஓய்வெடுத்த பிறகு கங்கைச் சமவெளியில் உள்ள பியாசி என்கிற நாட்டைக் கைப்பற்ற நினைத்தார். ஆனால் அவருடைய வீரர்களோ மிகவும் தயங்கினார்கள்.

எங்கள் பிள்ளைகளைக் கண்களால் ஒருமுறை பார்த்து விடுகிறோம். பிறகு போர்க்களம் செல்கிறோம்.

வீரர்களின் உணர்வுகளை ஏற்றுக்கொண்டாக வேண்டிய கட்டாயம். மனத்தை மாற்றிக் கொண்டார் அலெக்சாண்டர்.

அன்புமிக்க வீரர்களே, உங்களுடைய உழைப்பு, திறமை எல்லாவற்றையும் வைத்துப் பார்த்தேன்.

பத்தாண்டுகளாகத் தொடர்ந்து போர். போரைத் தவிர வேறு எதுவுமே நம்முடைய வாழ்க்கையில் இல்லாமல் போய்விட்டது.

(தொடரும்)

# கொரோனா பரவல் குறைந்து வந்தாலும் எந்தநாடும் கட்டுப்பாடுகளை தளர்த்தக்கூடாது


## உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை

(ஜெனிவா)

**கொரோனா வைரஸ் பரவல் குறைந்தாலும், எந்த ஒரு நாடும் கட்டுப்பாடுகளை தளர்த்தக்கூடாது. அதற்கான தருணம் வரவில்லை என்று உலக சுகாதார . நிறுவனம் எச்சரித்துள்ளது.**

உலகுக்கு பெரும் சவாலாக அமைந்த கொரோனா வைரஸ், கடந்த 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் சீனாவில் முதன்முதலாக வெளிப்பட்டது.

அந்த வைரஸின் சீற்றம், அது தோன்றி ஓராண்டு கடந்து விட்ட நிலையில் இப்போது தணியத்தொடங்கி உள்ளது. கொரோனா பரவல் பல நாடுகளிலும் குறைந்து வருகிறது. இது உலக நாடுகளையெல்லாம் நிம்மதிப்பெருமூச்சு விட



வைத்துள்ளது.

இந்த நிலையில் உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கூறியதாவது,

தொடர்ந்து 4ஆவது வாரமாக கொரோனா வைரஸ்பெருந்தொற்று பரவல், உலக அளவில் குறைந்து இருக்கிறது. அதுமட்டுமன்றி தொடர்ந்து 2ஆவது வாரமாக கொரோனா உயிர்ப்பலி எண்ணிக்கையும் சரிந்துள்ளது.

பல நாடுகளிலும் பொது சுகாதார நடவடிக்கைகளை மிக தீவிரமாக நடைமுறைப்படுத்தி உள்ளதன் விளைவுதான் இது என்று தோன்றுகிறது.

இதற்காக நாம் ஊக்கம் அடையலாம். ஆனால் இதில் மனநிறைவு கொள்வது என்பது அந்த வைரஸைப் போலவே ஆபத்தானது.

தற்போது கட்டுப்பாடுகளை தளர்த்தும் தருணம் எந்த நாட்டுக்கும் வரவில்லை. எனவே கட்டுப்பாடுகளை தளர்த்தக் கூடாது.

அதே போன்று எந்த தனிநபரும் கொரோனா கால பாதுகாப்பு அம்சங்களை குறைப்பதற்கான தருணமும் இது அல்ல.


தடுப்பூசிகள் தயாரிப்பு தொடங்கி உள்ள நிலையில் நேர்ந்துள்ள ஒவ்வொரு உயிரிழப்பும் மிகுந்த சோகத்துக்குரியதுதான் என மேலும் தெரிவித்தார். (க-4)

## ஆந்திராவில் கோர விபத்து; 14 பேர் சம்பவ இடத்தில் பலி

(ஆந்திரா)

ஆந்திர மாநிலம் கர்னூலில் நிகழ்ந்த வீதி விபத்தில் 8 பெண்கள் உட்பட 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சித்தூரை சேர்ந்த 18 பேர் டெம்போ வான் ஒன்றில் அஜ்மீர் நோக்கி சென்று கொண்டிருந்தனர். அவர்கள் பயணம் செய்த டெம்போ வான் கர்னூல் மாவட்டத்தில் மாதாபுரம் அருகே சென்று கொண்டிருந்த போது லொறி மீது மோதி விபத்து ஏற்பட்டது.இந்தக் கோர விபத்தில் வானில் பயணம் செய்தவர் களில் 14 பேர் சம்பவ இடத்தி லேயே பரிதாபமாக உயிரிழந்தனர். (க-4)



## வழக்கிலிருந்து செனட் சபையால் விடுவிக்கப்பட்டார் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக வேட்பாளர் பிடன் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, ட்ரம்ப் பதவி விலக வேண்டியிருந்தது. ஆனால், தேர்தலில் முறைகேடு நடந்துள்ளது என குற்றச்சாட்டுக் கூறி வந்த ட்ரம்ப் தனது ஆதரவாளர்களிடையே வன்முறையைத் தூண்டும் வகை யில் பேசினார் என குற்றச்சாட்டு எழுந்தது.

இதனை தொடர்ந்து அவர் மீது கண்டன தீர்மானம் நிறைவேறியது. அமெரிக்க செனட் சபையில் இந்த வழக்கு விசாரணை நடந்தது. இதில், கடந்த ஜனவரி 6 ஆம் திகதி வன்முறையைத் தூண்டும் வகையில் பேசிய ட்ரம்புக்கு எதிராக செனட் சபையை சேர்ந்த குடியரசுக் கட்சியினர் 7 பேர் வாக்களித்தனர்.

அவர்கள் ஜனநாயக கட்சியினருடன் இணைந்து ட்ரம்புக்கு எதிராக நின்றனர். எனினும் அவர் சார்ந்த குடியரசுக் கட்சியினர் பலர் ட்ரம்புக்கு ஆதரவாக வாக்களித்தனர். இதனால், செனட் சபை யில் 57-43 என்ற கணக்கில் ஆதரவு வாக்குகளைப் பெற்ற ட்ரம்ப் குற்றவாளி இல்லை என தீர்ப்பு கிடைத்து இந்த வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார். (க-4)

## இரட்டை பச்சிளம் குழந்தைகளை தூக்கிச் சென்ற குரங்குகள்

(தஞ்சாவூர்)

தஞ்சாவூரில் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த இரட்டைப் பச்சிளம் குழந்தைகளைக் குரங்குகள் தூக்கிச் சென்றதில், ஒரு குழந்தையைக் குரங்கு குளத்தில் வீசியதால் இறந்ததாகவும் உறவினர்கள் சத்தம் போட்டதால் மற்றொரு குழந்தையைக் கீழே போட்டுவிட்டுச் சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தஞ்சாவூரில் அண்மையில் புவனேஸ்வரிக்கு இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்தன. இந்நிலையில் நேற்று முன் தினம் மதியம் சுமார் 1.30 மணியளவில் இரண்டு குழந்தைகளும் வீட்டின் நடுவில் உறங்கிக் கொண்டிருந்த போது குரங்குகளின் சத்தம் கேட்டு வந்து பார்த்தால் இரண்டு பச்சிளம் குழந்தைகளையும் காணவில்லை.

வீட்டின் மேற்கூரையில் குரங்கொன்று கையில் ஒரு குழந்தையை மேற்கூரையிலேயே போட்டு விட்டு குரங்கு தப்பிச் சென்றது.இன்னொரு குழந்தையைத் தேடிய போது, வீட்டின் பின்புறம் உள்ள குளத்திலிருந்து குழந்தையின் உடலை உறவினர்கள் மீட்டனர்.

மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற பொது மருத்துவர்கள் குழந்தை ஏற் கனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

குழந்தை உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-4-8)


## ஈரான்- ஆப்கானிஸ்தான் எல்லையில் அடுத்தடுத்து தீப்பிடித்த டாங்கர் லொறிகள்

(குவாலா)

ஈரான்-ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள சுங்கத்துறை வளாகத்தில் ஏராளமான டாங்கர் லொறிகள் தீப்பற்றியதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஈரான்-ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டி உள்ள ஆப்கானிஸ்தான் பகுதியான இஸ்லாம் குவாலா நகரில் சுங்கத்துறை சோதனைச்சாவடி உள்ளது. ஈரானில் இருந்து வரும் வாகனங்கள் மற்றும் ஈரானுக்கு செல்லும் வாகனங்கள் தணிக்கை செய்யப்படுகின்றன. எனவே, இந்த பகுதியில் எப்போதும் வாகனங்கள் அதிக அளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு சுங்கத்துறை வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த



டாங்கர் லொறிகள் திடீரென தீப்பிடித்தன.

அடுத்தடுத்து லொறிகள் பயங்கர சத்தத்துடன் வெடித்து தீப்பிடித்தன.

பெற்றோல், டீசல், எரிவாயு ஏற்றி வந்த நூற்றுக்கணக்கான லொறிகள் தீப்பிடித்ததால் அப்பகுதியில் உள்ள மின்சார உட்கட்டமைப்புகள் சேதமடைந்தன. இதனால் மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

விபத்து குறித்து தகவல் அறிந்த தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு சென்று தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த தீ விபத்தில் 60க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உயிரிழப்பு குறித்து எந்த தகவலும் இல்லை.

சேத மதிப்பு பல கோடி ரூபாய் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. (க-4)

## பொறுப்புக்கூறலை நடைமுறைக்கு சாத்தியமாக்கும் வகையில்

# புதிய பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்

### சுமந்திரன் வலியுறுத்து



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நடைபெறவுள்ள 46ஆவது அமர்வில், இலங்கை தொடர்பில் கொண்டு வரப்படவுள்ள புதிய பிரேரணையின் உள்ளடக்கம் குறித்து உறுப்பு நாடுகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளார்.

குறித்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்த சுமந்திரன், "இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்கியிருந்த போதும் கூட பொறுப்புக் கூறல் செயற்பாடுகள் போதுமான முறையில் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும்,

மேலும் இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தினை தொடர்ச்சியாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நீடித்துக்கொண்டிருப்பதன் காரணமாக எவ்விதமான நன்மைகளும் ஏற்பட்டுவிடப்போவதில்லை எனவும் இலங்கையின் பொறுப்புக்கூறலை நடைமுறைச்சாத்தியமாக்கும் வகையில் பொறி முறையொன்று மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும் எனத் தெரிவித்ததுடன் தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாகவே இலங்கையின் பொறுப்புக்கூறலை வலியுறுத்த முடியும். ஆனால் அதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாக உள்ளன.


மேலும் பாதுகாப்புச் சபை ஊடாக இந்த விவகாரம் நகர்த்தப்பட வேண்டியிருப்பதால் அவ்வாறான சாத்தியப்பாடுகள் குறைவாக இருக்கின்றன. எனினும் சந்தர்ப்பங்கள் குறைவாக இருக்கின்றன என்பதற்காக அதற்குரிய முயற்சிகளை கைவிடாது தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

இதற்கு சர்வதேச சமூகம் முழுமையான ஆதரவளிக்க வேண்டும். அத்துடன் இலங்கை தொடர்பில் இணை அனுசரணை நாடுகளால் உறுப்பு நாடுகளின் ஆதரவுடன் கொண்டு வரப்படவுள்ள புதிய பிரேரணை வலுவானதாக அமைய வேண்டும்.

அதன் உள்ளடக்கங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலும் இலங்கை விடயம் நீட்சி பெறுவதை உறுதிப்படுத்துவதாக அமைய வேண்டும்" எனவும் குறிப்பிட்டுள்ளார். (க-4)

### இலங்கைக்கு மேலும் நெருக்கடி

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் துணைத் தலைவராக பொப்ரே நியமனம்




(டென்ஹொக்)

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் துணைத் தலைவராக கனேடிய இராஜ தந்திரியான பொப்ரே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கனேடிய பாராளுமன்ற உறுப்பினராகவும் ஒன்ராரியோவின் முதல்வராகவும் செயற்பட்டிருந்த இவர் இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மனிதாபிமானச் சட்ட மீறல்கள் தொடர்பில் அதீத கரிசனையை வெளிப்படுத்தியவராவார்.

இந்நிலையில், இவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமையானது, இலங்கை அரசாங்கத்திற்கு புதிய நெருக்கடியை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

இலங்கை விவகாரம் குற்றவியல் நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப் படும் போது, இலங்கை விவகாரங்கள் தொடர்பாக நன்கறிந்தவரான பொப்ரே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இருப்பது இல்ங்கை அரசாங்கத்திற்கு மேலும் நெருக்கடிகளை அளிக்கும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது. (க-4-6)

## விஜியரட்ணம் ஞாபகார்த்த ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக்கிண்ணம்

# பன்தேர்ஸ் அணி 4 ஓட்டங்களால் வெற்றி




விஜியரட்ணம் ஞாபகார்த்த ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக்கிண்ணத் தொடரின் 10 ஆவது தகுதிகாண் போட்டி கடந்த 06 ஆம் திகதி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் பன்தேர்ஸ் அணி கொக்குவில் ஸ்ரார் அணியை 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பன்தேர்ஸ் அணி 20 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 126ஓட்டங்களைப்பெற்றது.

துடுப்பாட்டத்தில் கோமாநந்-36, தனுஜன்-17, செல்ரன்-14, நிதர்ஸன்-14, டனிசியஸ் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் கொக்குவில் ஸ்ரார் அணியைச் சார்ந்த நம்பியலராகுலன்-04, சாகித்தியன்-02, எடின், இயலரசன், பிரதீஸ்-01 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஸ்ரார் அணி 20 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 122 ஓட்டங்களைப் பெற பன்தேர்ஸ் அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

துடுப்பாட்டத்தில் இயலரசன்-16, றஜீவ்குமார்-26, பிரதீஸ்-23, மோகன்குமார்-25, நம்பி-19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பன்தேர்ஸ் சார்பாக கனிஸ்ரன்-04, ஜெரிக்-02, நிதர்ஸன், துசி, றெகான் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக பன்தேர்ஸ் அணியைச் சார்ந்த கனிஸ்ரன் தெரிவு செய்யப்பட்டார். (க)






# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

05

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அமெரிக்காவில் அதிகமான அரசியல் கட்சிகள் இருந்தாலும் சில கட்சிகள் மட்டுமே தங்கள் வேட்பாளர்களின் பெயர்களை வாக்குச்சீட்டில் அச்சிடுவதற்கு தகுதி பெறுகின்றன. ஒரு கட்சி பெயர்களை வாக்குச்சீட்டில் அச்சிடுவதற்குத் தகுதி பெறுவதற்கு ஒரு சில தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.


அதாவது கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலுக்கு குறிப்பிட்ட நாட்களுக்கு முன்னதாக (எவ்வளவு நாட்களுக்கு முன்னதாகவென்பது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். சராசரியாக இரு மாதங்களுக்கு முன்னதாக) ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்சியின் வேட்பாளர்களின் பெயர்களைச் சான்றளித்து உரிய தேர்தல் அதிகாரிகளிடம் (சில மாநிலங்களில் ஆளுநரிடமும் பல மாநிலங்களில் மாநிலச் செயலாளரிடமும்) கையளிக்க வேண்டும்.

தகுதி பெறுதல் என்பதும் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, சில மாநிலங்களில், ஒரு கட்சி அல்லது சுயேட்சை வேட்பாளர் வாக்குச்சீட்டில் பெயரிடல் தகுதி பெறுவதற்காக ஒரு மனுவைத் தாக்கல் செய்ய வேண்டியிருக்கும். சில மாநிலங்களில் கட்சிக்கு வாக்குச்சீட்டு அந்தஸ்து வழங்கப்படுவதற்கு அந்த வேட்பாளர் ஒரு சதவீத வாக்குகளை வெல்ல வேண்டும்.

இன்னும் சில மாநிலங்களில், அரசியல் கட்சி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வாக்காளர்கள் அவர் கட்சியில் பதிவு செய்யப்பட்டு இருக்க வேண்டும். இவ்வாறான நிபந்தனைகள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடும். இந் நிபந்தனைகளைக் கட்சிகள் பூர்த்தி செய்தால் அவ் அவ் மாநிலத்தினால் வெளியிடப்படும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச்சீட்டில் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதியின் பெயர்கள் அச்சிடப்படும்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்படாத ஒரு கட்சிக்கு / வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டுமாயின், வாக்களிக்கும் ஒரு வாக்காளர்கள் வேட்பாளரின் பெயரை அவ்வாக்குச்சீட்டில் எழுதியே வாக்களிக்க வேண்டும். இதற்கு வாக்குச்சீட்டில் **"write-in"** என்ற இடம் ஒதுக்கப்பட்டிருக்கும்.

இதை உரு-1 இல் பார்க்கலாம். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் இவ்வாறு தனது பெயரை வாக்குச்சீட்டில் எழுதி வாக்களிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்கு அம்மாநில


உரு-1

Federal Offices

United States President and Vice President

Your vote for the candidates for United States President and Vice President shall be a vote for the electors supporting those candidates.

Vote For One

Donald J Trump/Michael R Pence
Republican

Joseph R Biden/Kamala D Harris
Democrat

Jo Jorgensen/Jeremy (Spike) Cohen
Libertarian

Howie Hawkins/Angela Walker
Pacific Green

Dario Hunter/Dawn Neptune Adams
Progressive

write-in

வேட்பாளரின் பெயர் எழுதி வாக்களிக்கும் இடம்.

அரசின் தேர்தல் அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும். இவ் அனுமதி பெறும் முறையும் பெயர்களை வாக்குச்சீட்டில் அச்சிடுவதற்குத் தகுதிபெறும் முறையை ஒத்தது.

> **ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்படாத ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்க வேண்டுமாயின், வாக்களிக்கும் ஒரு வாக்காளர்கள் வேட்பாளரின் பெயரை அவ்வாக்குச்சீட்டில் எழுதியே வாக்களிக்க வேண்டும். இதற்கு வாக்குச்சீட்டில் "write-in" என்ற இடம் ஒதுக்கப்பட்டிருக்கும்.**

பொதுவாக வாக்குச்சீட்டில் பெயர் தோன்றாத வேட்பாளர் பதவியை வெல்வது மிகவும் அரிது. இதனால் சில சந்தர்ப்பங்களில், எழுதும் நிலை வாக்குகள் (write- in votes) வெறுமனே கணக்கிடப்படுவதில்லை. வாக்குச்சீட்டில் வேட்பாளர் ஒருவரின் பெயர் அச்சிடப்பட்டிருப்பது வாக்குச்சீட்டில் பெயரில்லாத வேட்பாளர்களிலும் பார்க்க நன்மையை அளிக்கிறது.

ஜனாதிபதித் தேர்தல் தவிர்ந்த வேறு சில தேர்தல்களில் எழுதும் நிலை வாக்குகள் மூலம் வேட்பாளர்கள் வெற்றி அடைந்த சந்தர்ப்பங்களும் உண்டு. கடந்த காலங்களில் இரண்டு செனட் சபை உறுப்பினர்கள் எழுதும் நிலை வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கொழும்பில் உள்ள தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படும். ஆனால் அமெரிக்காவில் மாநிலங்களே ஜனாதிபதி தெரிவுகான தேர்வு செய்வோர் அவை (Electoral College) உறுப்பினர்களைத் தெரிவு செய்கின்றன.

ஆகையால் ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள் மாநில மட்டத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் தாக்கல் செய்யவேண்டும். இதுவே மாநில வாக்குச்சீட்டில் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி பதவிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்களை இடம்பெறச்செய்தல் எனப்படுகிறது.

> **அமெரிக்காவில் மாநிலங்களே ஜனாதிபதி தெரிவுகான தேர்வு செய்வோர் அவை (Electoral College) உறுப்பினர்களைத் தெரிவு செய்கின்றன. ஆகையால் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் மாநில மட்டத்தில் ஒவ்வொரு மாநிலத்திலும் தாக்கல் செய்ய வேண்டும்.**

அந்த வகையில் குடியரசுக் கட்சி சார்பில் ட்ரம்பும் மைக்பென்சும் வோஷிங்டன், டி.சி.மற்றும் 50 மாநிலங்களிலும் போட்டியிட்டனர். ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோ பிடனும் கமலா ஹாரிசும் வோஷிங்டன், டி.சி.மற்றும் 50 மாநிலங்களிலும் போட்டியிட்டனர். இதேபோல் லிபர்டேரியன் கட்சி வேட்பாளர்களும் 51 இடங்களிலும் போட்டியிட்டனர். இம் மூன்று கட்சியினதும் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி பதவிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்கள் வாக்குச்சீட்டில் அச்சிடப்பட்டிருந்தன. பசுமைக் கட்சியின் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி பதவிகளுக்கான வேட்பாளர்களின் பெயர்கள் 30 மாநிலங்களில் வாக்குச்சீட்டில் அச்சிடப்பட்டிருந்தன.

12 மாநிலங்களில் வாக்குச்சீட்டில் பெயர் எழுதப்படும் வேட்பாளராகளாகவே (write-in candidate) போட்டியிட்டனர். இவ்வாறு சில மாநிலங்களில் வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்பட்ட வேட்பாளர்களாகவும் மற்றும் சில மாநிலங்களில் அவர்கள் பெயர் எழுதப்படும் வேட்பாளர்களாகவும் அல்லது சில மாநிலங்களில் வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்பட்ட வேட்பாளர்களாக மட்டும் அல்லது சில மாநிலங்களில் பெயர் எழுதப்படும் வேட்பாளர்களாக மட்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை 123 ஆகும்.

எனவே முன்னர் கூறிய 4 ஜனாதிபதி வேட்பாளர்கள் உட்பட எல்லாமாக நடந்த தேர்தலில் போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை 127 ஆகும்.

இதில் ஆகக்குறைந்தது ஒரு மாநிலத்திலாவது வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்பட்ட வேட்பாளர்களாக போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை 36 ஆகும்.

மிகுதி 91 ஜனாதிபதி வேட்பாளர்களின் பெயரும் எந்தவொரு மாநில வாக்குச்சீட்டிலும் அச்சிடப்படவில்லை. வாக்குச்சீட்டில் பெயர் அச்சிடப்பட்ட வேட்பாளர்களாக ஒரே ஒரு மாநிலத்தில் மட்டும் போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை 10 ஆகும்.

இவர்கள் மற்றைய எந்தவொரு மாநிலத்திலும் போட்டியிடவில்லை. இவ்வாறு வாக்குச்சீட்டில் பெயர் எழுதப்படும் வேட்பாளர்களாக ஒரே ஒரு மாநிலத்தில் மட்டும் போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை 63 ஆகும். இவர்களும் மற்றைய எந்தவொரு மாநிலத்திலும் போட்டியிடவில்லை. இவ்வாறு போட்டியிட்ட வேட்பாளர்கள் பெயருக்காக போட்டியிட்டவர்களே.

இவ்வாறு போட்டியிட்டு ஒரு தேர்வு செய்வோர் அவை (**Electoral College**) உறுப்பினர்களைக்கூட பெறமுடியாது. எனவே இத்தேர்தலில் முக்கிய வேட்பாளர்களாக குடியரசுக் கட்சி, ஜனநாயகக்கட்சி, லிபர்டேரியன்கட்சி, பசுமைக்கட்சி ஆகிய கட்சியைச் சார்ந்தவர்களைக் குறிப்பிடலாம். அதிலும் பிரதான வேட்பாளர்களாக குடியரசுகட்சி, ஜனநாயகக்கட்சி மட்டும் குறிப்பிடலாம்.

> **நடந்த தேர்தலில் போட்டியிட்ட ஜனாதிபதி வேட்பாளர்களின் எண்ணிக்கை 127 ஆகும். 91 ஜனாதிபதி வேட்பாளர்களின் பெயர் எந்தவொரு மாநில வாக்குச்சீட்டிலும் அச்சிடப்பட்டிருக்கவில்லை.**

இதை வேறு வழியில் கூறுவதனால் 2020 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் மாநில அளவில் மொத்தமாக வாக்குச்சீட்டில் வேட்பாளர்களின் பெயர்கள் அச்சிடப்பட்ட 309 அரசியல் கட்சிகளும் சுயேட்சைகளும் இருந்தன.

ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சி ஆகிய இரண்டும் அனைத்து 50 மாநிலங்களிலும் மற்றும் வோஷிங்டன், டி.சி. இலும் வாக்குச்சீட்டில் வேட்பாளரின் பெயர் அச்சிடப்பட்டிருந்தன.

(தொடரும்)

# நாட்டு மக்களை ஏமாற்றுவது போல் சர்வதேசத்தை ஏமாற்ற முடியாது

(கொழும்பு)

**இலங்கைக்குள் விளையாடுவதைப் போன்று ஜெனிவாவில் அரசாங்கத்தால் விளையாட முடியாது. விளையாட்டுக்களின் மூலம் உள்நாட்டு மக்களை ஏமாற்றினாலும் சர்வதேசத்தை ஏமாற்ற முடியாது. எனவே நேர்மையாக செயற்பட வேண்டும். வெளிநாட்டு கொள்கைகளை முறையாகப் பேண வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.


மேலும் அவர்,வெளிநாடுகளுக்கு தேசிய சொத்துக்களை விற்பதற்கு நாம் ஒருபோதும் ஆதரவளிக்க மாட்டோம். ஆனால் இராஜதந்திர தொடர்புகளை சுமுகமாகப் பேண வேண்டியது அத்தியாவசியமாகும். எனினும் அரசாங்கம் அதனை முறையாக பேணுவதாகத் தெரியவில்லை. ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடமும் அரசாங்கம் பின்பற்றும் வெளிநாட்டுக் கொள்கை என்ன என்று வினவுகின்றோம்.

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் தொடர்பில் ஜனாதிபதி கூறிய கருத்துக்களும் அதற்கு வெளியிடப்பட்டுள்ள எதிர்ப்புக்களும் விமல் வீரவன்சவின் செயற்பாடுகளும் அரசாங்கத்தின் ஸ்திரமற்ற செயற்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. மறுபுறம் அத்தியாவசிய பொருட்களுக்கான விலைகளை குறைப்பதாகக் கூறிக் கொண்டு அதனைஅதிகரித்துள்ளனர்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதிக பலத்தைக் கொண்டுள்ள அரசாங்கத்திற்கு வெறும் 20 கம்பனிகளை கட்டுப்படுத்த முடியாதா? பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் பெற்றுக் கொடுக்கப்படும் என்று கூறிய உடனேயே பெருந்தோட்ட கம்பனிகள் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. அரசாங்கமும் கம்பனிகளுடன் இணைந்தே செயற்படுகின்றது என்பது இதன் மூலம் தெளிவாகிறது என அவர் தெரிவித்தார். (க-4)

# மேற்கு முனையமும் தேசிய வளமே பிறநாட்டிற்கு வழங்க இடமளிக்க முடியாது

## துறைமுக பொது ஊழியர் சங்கம்



(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை பெற்றுக் கொள்வதற்கு இந்திய நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அறிய முடிகிறது.

மேற்கு முனையத்தின் 85 சதவீத உரிமத்தை பிற நாட்டு நிறுவனத்துக்கு வழங்க இடமளிக்க முடியாது. கிழக்கு முனையத்தை பாதுகாக்க மேற்கொண்ட முயற்சியை மேற்கு முனைய விவகாரத்திலும் முன்னெடுப்போம் என அகில இலங்கை துறைமுக பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் நிரோஷன் கொரகாஹேன்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் துறைமுக தொழிற்சங்கத்தினர் கடுமையான தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடாமலிருந்திருந்தால் அரசாங்கம் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்கியிருக்கும். அனைத்து தரப்பினரது ஆதரவையும் கொண்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை மிக்க அரசாங்கத்தை அடிபணிய வைத்துள்ளோம்.

கிழக்கு முனையத்துடன் மேற்கு முனையத்தை ஒப்பிட முடியாது. கிழக்கு முனையமே பெறுமதியானது என அரசியல்வாதிகள் அரசியல் இலாபத்திற்காக குறிப்பிட்டுக் கொள்ளும் கருத்துக்களை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அரசியல்வாதிகள் ஒன்றும் படித்த துறைசார் நிபுணர்கள் கிடையாது. அரசியல்வாதிகள் அனைத்து விடயங்களையும் அரசியல் இலாபத்துடன் ஆராய்வார்கள்.

கிழக்கு முனையத்துக்குப் பதிலாக மேற்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்க அரசாங்கம் எடுத்த தீர்மானத்திற்கு இந்தியா ஆரம்பத்தில் அதிருப்தி தெரிவித்திருந்தாலும் தற்போது குறித்த இந்திய நிறுவனம் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தை பெற்றுக் கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாக தெரிய வருகின்றது.

தேசிய வளங்களைப் பாதுகாக்கும் விடயத்தில் கிழக்கு முனையம், மேற்கு முனையம் என்ற வேறுபாடு கிடையாது. அனைத்து தேசிய வளங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என அவர் தெரிவித்தார்.(க-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஞானிகள்

ஒருத்தர் தனியாக ஒரு இடத்தில் கண்ணை மூடிக்கொண்டே உட்கார்ந்திருக்கிறார். அவர் தூங்கிக் கொண்டிருக்கின்றாரா–தியானம் செய்து கொண்டிருக்கின்றாரா? எப்படி கண்டு பிடிக்கிறது?

நமக்குத் தெரிந்த வரைக்கும் தூக்கம் என்றால் தலை அடிக்கடி சாயும். பின் நிமிரும். தியானம் என்றால் ஆடாமல் அசையாமல் அப்படியே இருக்கும். தூக்கத்திற்கும் தியானத்திற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. ஒரு முட்டாள் தூங்கப் போனால் முட்டாளாகவே திரும்பி வருகின்றான். இப்படி பெரியவர்கள் எல்லாம் சொல்கின்றார்கள். அது இருக்கட்டும்... ஞானிகளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்? இப்பொழுது நாம் அழகான ஒரு ரோஜாப் பூவைப் பார்க்கின்றோம்.

ஆகா எவ்வளவு அழகாக இருக்கு இது என்று வியக்கின்றோம். ஒரு ஞானி அதே ரோஜாப் பூவைப் பார்க்கின்றார். அவரும் நினைக்கின்றார் ஆகா இது எவ்வளவு அழகாக இருக்கு என்று. உலகப் பொருட்களை நாம் எப்படி ஐம்புலன்கள் மூலமாக உணர்கின்றோமோ அப்படித்தான் அவர்களும் உணர்கின்றார்கள். அதிலே ஒன்றும் வித்தியாசமில்லை.

அல்வா சாப்பிடுகின்றோம். அது நமக்கு மட்டும் தான் இனிக்கும். ஞானிகளுக்கெல்லாம் கசக்கும் என்றா சொல்லுவோம்? அப்படி இல்லை அதிலே வித்தியாசம் இல்லை.

பின்பு ஞானிகளுக்கும் நமக்கும் என்ன தான் வித்தியாசம்? அந்த வேறுபாடு எந்தக் கட்டத்திலே ஆரம்பமாகின்றது? அதை இப்பொழுது பார்ப்போம். இப்பொழுது மறுபடியும் அந்த ரோஜா பூவிடம் போவோம். ஞானி அதைப் பார்க்கின்றார்.

ஆகா எவ்வளவு அழகாக இருக்கின்றது என்று நினைக்கின்றார். அதற்கு பின்பு அதையே நினைக்கிறதில்லை. வேறு வேலையைப் பார்க்கப் போயிடுவார். அல்லது இயற்கையின் ஆற்றலைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விடுவார் அவ்வளவு தான். ஆனால் நாம் அப்படிச் செய்ய மாட்டோம்.

நாம் என்ன செய்வோம் தெரியுமா? முதலில் அந்த ரோஜாப் பூவைப் பார்ப்போம். ஆக எவ்வளவு அழகாக இருக்கு என்று நினைப்போம். அந்த அழகை ரசிப்போம். பின்பு இந்த மலர் எங்களிடம் இருந்தால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று நினைப்போம். அதன்பின்பு அந்த மலர் நமக்கு வேண்டும் என்று நினைப்போம்.

அதுக்கு அடுத்த கட்டம் அந்த மலர் இல்லை என்றால் எங்களால் வாழ முடியாது என்கின்ற நிலைமைக்கு வந்து விடுவோம். உடனே அந்த மலரை அடைவதற்கு முயற்சி செய்வோம். அதற்கு யாராவது தடையாக இருந்தால் அவர்கள் மேலே நமக்குக் கோபம் வரும். அந்த கோபத்தின் காரணமாக எங்கள் விவேக புத்தியை இழப்போம். யாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை மறந்து விடுவோம்.

அதன் காரண்மாக ஞாபக மறதி ஏற்படும். அதாவது முன்பு விவேக புத்தி மழுங்கியிருந்தது என்றால் அது இப்பொழுது அடியோடு இல்லை என்கின்ற நிலை ஏற்படும்.அதன் காரணமாக எங்கள் புத்தியை இழப்போம். கடைசியில் அழிவோம். இந்த நிலைமை நமக்கு வந்துவிடக்கூடாது என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும்? நமக்கு கெடுதல் செய்யக் கூடிய ஆசைகளை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிந்துவிட வேண்டும்.

ஒரு விடயம் என்ன தெரியுமா? எந்த ஆசைக்கும் முதலில் வலு கிடையாது. அதைப் பற்றி நாம் நினைக்க நினைக்கத்தான் அதற்கு வலு உண்டாகின்றது. இளம் தளிராக இருந்தது. இப்பொழுது பெரிய மரமாக ஆகிவிடுகின்றது.

ஞானிகள் இந்த அளவுக்கு அதை வளர விடுவதில்லை. அதுதான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம்.

ஒரு இளைஞன் கையிலே ஒரு குச்சியை வைத்துக் கொண்டு நடந்து போய்க் கொண்டிருக்கின்றான். இன்னொரு வயதானவர் கையிலே ஒரு குச்சியை வைத்துக் கொண்டு நடந்து போகின்றார். அது அவருக்கும் ஊன்றுகோல். அது இல்லை என்றால் அவரால் நடக்க முடியாது. அது தவறி கீழே விழுந்தால் அவரும் விழுந்து விடுவார்.

ஆனால் அந்த இளைஞன் அப்படி இல்லை. அவனுடைய கைத்தடியை யாராவது எடுத்துக் கொண்டு போனால் கூட அவன் கவலைப்பட மாட்டான். அவன் அந்தக் கைத்தடியைப் பயன்படுத்துவது மாதிரித்தான் ஞானிகள் உலகப் பொருட்களைப் பயன்படுத்துவார்கள்.

ஆனால் எங்களை மாதிரி சாதாரண ஆட்கள். அந்த வயதானவர் கைத்தடியை பயன்படுத்தியது மாதிரி உலகப் பொருட்களைப் பயன்படுத்துகின்றோம். இதுதான் ஞானி களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம். ஞானிகள் பொருட்களைத் துறக்க மாட்டார்கள்.அவற்றின் மீது உள்ள பற்றுத்தலைத் தான் துறப்பர். எனக்குத் தெரிந்த ஞானி ஒருவர் இருக்கின்றார். அவர் சொன்னார்...1988 ஜூன் மாதம் முதல் திகதியை என்னாலே மறக்க முடியாது என்றார்.

ஏன் என்று கேட்டேன். அது தான் எனக்கு ஞானம் வந்த நாள் என்றார். அப்படியா? என்றேன்.

ஆமாம் அன்றைக்குத் தான் எனக்கு கல்யாணம் ஆகியது. என் மனைவி பேர் ஞானம் என்றார்.

# நாட்டில் நிலவும் குளிர் நிலைமை இம்மாத இறுதிவரை தொடரும்



(கொழும்பு)

நாட்டில் தற்போது காலை வேளையில் நிலவும் அதிகூடுதலான குளிர் நிலைமை இந்த மாதம் இறுதி வரை தொடரக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

தற்போது காணப்படும் வறட்சியான காலநிலையே இதற்குக் காரணம் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதன்படி, மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும்.

இதேவேளை, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் பெய்யக் கூடிய சிறிதளவான மழைவீழ்ச்சியைத் தவிர நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## பேரின்பம் தரும் 'ஓம்' மந்திரம்

(தொடர்ச்சி)

இந்த நிலை தொடர தொடர நீங்கள் ஆன்மிக பேரின்பத்தைப் பெற முடியும். அதுவும் மிகவும் உயரமான இடத்தில் இருந்து ஓம் என்று உச்சரித்தால் பலன் அதிகம்.

அதனால்தான் முனிவர்கள், சித்தர்கள் மலை உச்சியில் இருந்து தியானம் செய்தனர். நாம் மலைக்கோவில்களில் இருந்து ஓம் சொல்லலாம்.

ஓம் மந்திரத்தைத் திரும்ப திரும்பக் கூறி வந்தால் மூச்சின் வேகம் குறையும். இது நோய்கள் வருவதைத் தடுக்கும். நோய் இருந்தால் நீங்கும்.

மலட்டுத் தன்மையை விரட்டும் சக்தி ஓம் மந்திரத்துக்கு உண்டு. ஆலயங்களில் கிழக்கு நோக்கி அமர்ந்து ஓம் உச்சரித்தால் மனதில் அமைதி உண்டாகும்.

விபூதியில் ஓம் என்று எழுதிக் கொடுத்துக் குடிக்க வைத்தால் வயிற்று வலி நீங்கும். வேப்பங்குச்சியால் குழந்தைகள் நாவில் ஓம் என்று எழுதினால் அவர்கள் கல்வி மேம்பாடு பெறுவார்கள்.

வயதானவர்கள் இந்த மந்திரத்தைச் சொல்ல சொல்ல ஏகாந்த நிலையை அடையலாம். பிறப்பற்ற நிலையும் பரமானந்தமும் உண்டாகும்.

ஓம் மந்திரத்தை உள்வாங்கி உச்சரித்தால் அந்த மந்திர அதிர்வலைகள் நம் உடலெங்கும் ஒருவித காந்தசக்தி போல பரவுவதை உணரலாம். ஈழத் தமிழர்கள் ஆம் என்பதை ஓம் என்றே சொல்வார்கள். அவர்களுக்கு ஓம் பிரணவ மந்திரத்தின் பலன் நிச்சயமாக அதிகம் கிடைக்கும்.

ஓம் எனும் எழுத்தும் கூட மங்களகரமானதாகக் கருதி வழிபடப்படுகிறது. கருவில் இருக்கும் குழந்தை ஓம் வடிவத்தில்தான் காணப்படும். நம் காது கூட ஓம் போன்றுதான் இருக்கிறது.

ஓம் மந்திரத்தைச் சொல்பவன் விரும்பியது அனைத்தையும் பெறுவான் என்று கதோபநிடதம் கூறுகிறது. ஓம் என்பதை உச்சரிக்கும்போது முதலில் ஒரு சொல்லாகவும் பிறகு உருவமாகவும் உச்சரித்துத் தியானித்தால் முக்தியும் சித்தியும் கிடைக்கும் என்று திருமூலர் கூறியுள்ளார்.

ஓம் மந்திரத்தை அதிகமாக உச்சரித்தால் உடலின் ஏழு சக்கரங்களும் தூண்டப்பட்டு அது பெரிய மாறுதலைத் தரும். கவனம் சிதறாது மன அழுத்தம் வரவே வராது.

ஓம் எனும் பிரணவ மந்திர சொரூபமாகத் திகழ்வது மயில். இதன் பார்வை பட்ட இடத்தில் நன்மை உண்டாகும் என்பது ஐதீகம். அதனால்தான் வேலும் மயிலும் துணை என்றனர்.

ஓம் எனும் ஒலி அதிர்வுக்கு இப்படி பல ஆற்றல்கள் தரும் மகிமை உண்டு. ஓம் மந்திரமே உலகம் தோன்றுவதற்கு முன்பு எங்கும் நிரம்பி இருந்ததாகக் கருதுகிறார்கள்.

அண்மையில் நாசா விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் சூரியனில் இருந்து ஓம் எனும் ஓசை வெளிவந்து கொண்டிருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். இந்த உண்மையைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்கள் கண்டுபிடித்து விட்டனர்.

எனவே ஆலயங்களுக்குச் செல்லும் போது மறக்காமல் மூல மந்திரமான ஓம் சொல்லுங்கள்.

(முற்றும்)

# செய்தித்துளிகள்

## கொழும்பு-குவைத் புதிய விமான சேவை அறிமுகம்

(கொழும்பு)

"குவைத் பட்ஜெட் கேரியர் ஜசீரா ஏயார்வேஸ்" இலங்கையின் தலைநகருக்கு ஒரு புதிய விமான சேவையை அறிமுகப்படுத் தவுள்ளதாக அறிவித்துள்ளது.

அதன்படி மத்திய கிழக்கில் விமான சேவை வழங்கும் இடங்களுக்கான இணைப்புகளுடன் குவைத் மற்றும் கொழும்பு இடையே வாரத்திற்கு இரண்டு முறை நேரடி விமான சேவையை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

குறித்த விமான அட்டவணையை அறிவித்த ஜசீரா, J9 551 செவ்வாய் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் குவைத் சர்வதேச விமான நிலையத்திலிருந்து மாலை 6.45 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 2.35 மணிக்கு கொழும்பை வந்தடையும்.

விமானம் J9 552 திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் கொழும்பிலிருந்து அதிகாலை 3.35 மணிக்கு புறப்பட்டு காலை 7.05 மணிக்கு குவைத்தில் தரையிறங்கும் என அறிவித்துள்ளது. (க-4)

## சிறப்பு நடவடிக்கையில் 3,880 பேர் கைது

(கொழும்பு)



நாடு முழுவதும் பொலிஸார் முன்னெடுத்த சிறப்பு சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 3 ஆயிரத்து 880 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வீதிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் குற்ற விகிதங்களைக் குறைப்பதற்காகவும் இதுபோன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து நடத்தப்படும் என பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (க-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 240 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 550 | 600 |
| தக்காளி | 260 | 220 | 320 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 70 | 50 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 200 | 200 | 220 | 240 |
| பூசணி | 100 | 150 | 130 | 150 |
| புடோல் | 200 | 180 | 200 | 200 |
| வாழைக்காய் | 50 | 70 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 400 | 450 | 400 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 120 | 120 |
| பாகற்காய் | 180 | 160 | 240 | 400 |
| வெண்டிக்காய் | 250 | 300 | 240 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 140 |
| பயற்றங்காய் | 180 | 250 | 280 | 200 |
| லீக்ஸ் | 170 | 120 | 150 | 120 |
| பீற்றூட் | 220 | 250 | 200 | 240 |
| கறிமிளகாய் | 280 | 400 | 400 | 400 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 150 | 160 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 180 | 200 | 200 | 200 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 120 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 80-100 | 80-120 |
| இராசவள்ளி | 250 | 250 | 220 | 240 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 240 | 200 |
| முள்ளங்கி | 140 | 150 | 120 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 30 |
| ஈரப்பலா | 130 | — | 80 | 80 |

# தடுப்பூசி மருந்தை ஏற்றுவதில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை

## பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன்

(நல்லூர்)

**வடக்கு மாகாணத்தில் கொவிட் -19 தடுப்பூசி மருந்தை பொது மக்களுக்கு வழங்கும் பணியை மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் நேற்று தெரிவித்தார்.**

108 மையங்களில் இந்த தடுப்பூசி மருந்து வழங்கல் நடவடிக்கையை மேற்கொள்ள முன்னாயத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி மருந்து வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் தடுப்பூசி வழங்கப்பட வேண்டிய வர்களின் பட்டியலை வழங்கும் பணி பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர்களிட மிருந்து பட்டியலைப் பெற்று 108 மையங்களில் கொவிட்-19 தடுப்பூசி மருந்தை வழங்கும் பணி மார்ச் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும்.

தடுப்பூசி மருந்தை ஏற்றுவதில் பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் 85 சதவீதத்துக்கும் மேற்பட்ட சுகாதாரத் துறையினர் மற்றும் மருத்துவ சேவையாளர்கள் தடுப்பூசி மருந்தை பெற்றுக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு எந்த ஒவ்வாமையும் ஏற்படவில்லை.

பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்கள் தவிர்ந்த ஏனையோர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும்.


கொவிட்-19 நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் தடுப்பூசியைப் பெற்று ஒத்துழைக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (5-4-33)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

பளைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மருதங்கேணி பகுதியில் 5 கிலோ 550 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில், குறித்த நபர் நேற்று அதிகாலை மருதங்கேணியிலிருந்து கிளிநொச்சிக்கு செல்லும் போது பளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 5 கிலோ 550 கிராம் கஞ்சாவும் அவர் பயன்படுத்திய ஒரு மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பளைப் பொலிஸார் மேற் கொண்டு வருவதாக பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.டி.குணரட்ன தெரிவித்தார். (5-8-316)




யாழ்ப்பாண மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு யாழ்ப்பாணம் கேற்வே லயன்ஸ் கழகத்தால் ஒரு தொகுதி கொரோனாத்தடுப்பு அங்கிகள் வழங்கப்பட்டன. (படம்:-சுஜீவன்)

## கடலட்டைப் பண்ணை அங்குரார்ப்பணம்

(கண்டாவளை)

சுமார் 500 தொழிலாளர்களுக்கு நேரடித் தொழில் வாய்ப்பினை வழங்கும் வகையில் இரணைதீவில் பாரிய கடலட்டைப் பண்ணை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று அங்குரார்ப்பணம்செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன், பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்ணேந்திரன் மற்றும் கடற்றொழில் அமைச்சின் திணைக்கள அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், கடற்றொழிலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(5-4-315)



## அழிவடையும் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க தடுப்புவேலி அமைக்குமாறு கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லையால் தமது நெல் செய்கைகளை பாதுகாத்துக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் குறித்த பகுதிக்கு யானைத் தடுப்பு வேலிகள் அமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயக் கிராமங்களில் ஒன்றாக காணப்படுகின்ற வன்னேரிக்குளம் கிராமத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற காலபோக செய்கைகளை காட்டு யானைகள் தொடர்ச்சியாக அழித்து வருவதாகவும் இந்த அழிவுகளிலிருந்து தங்களுடைய பயிர்களைப் பாதுகாத்து கொள்வதற்காக தொடர்ச்சியாக காவல் கடமைகளில் ஈடுபட வேண்டிய நிலை காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் போது விதைப்பு முடிந்த 2 வாரங்கள் முதல் அறுவடை செய்ய வேண்டிய காலம் வரை தொடர்ச்சியாக பயிர்களைப் பாதுகாக்க வேண்டி இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

குறிப்பாக இந்த பிரதேசத்துக்கு யானைத்தடுப்பு வேலிகளை அமைத்துத் தருமாறு விவசாயிகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். தங்களுடைய வாழ்வாதாரமான விவசாயத்தைப் பாதுகாத்துக் கொள் வதற்கான வேலிகளை அமைத்துத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-8-315)

## பொலிஸார் உட்பட 4 பேருக்கு தொற்று உறுதி

(குருமன்காடு)

வவுனியா, சூசைப்பிள்ளையார் குளம் பகுதியில் வர்த்த நிலையம் ஒன்றில் பணியாற்றுபவருக்கு கடந்த வெள்ளிக்கிழமை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவருடன் தொடர்புடைய 80 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் நேற்று முன்தினம் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் மேலும் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

அத்துடன் நேற்று முன்தினம் மாலை வெளியாகிய பி.சி.ஆர்.முடிவுகளில் வவுனியா பொலிஸார் இருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் மேலும் 4 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுகாதார துறையினர் முன்னெடுத்துள்ளனர். (5-4-250)

## 'ரெக்' பந்தாட்ட விளையாட்டு மன்னாரில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது

(மன்னார்)

விளையாட்டுத் துறை அமைச்சினால் இலங்கையின் 72 ஆவது விளையாட்டாக அறிமுகப்படுத்தப்பட்ட ரெக் பந்தாட்ட (TEQ BALL) விளையாட்டு நேற்று மன்னார் மாவட்டத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.



மன்னார் மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகஸ்தர் எம்.பீரிஸ் லெம்பேட் தலைமையில் பொது விளையாட்டு மைதானத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் பிரதிநிதியாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் கலந்து கொண்டார்.

விருந்தினர்களாக இலங்கை ரெக் பந்தாட்ட திட்டமிடல் முகாமையாளர் சி. கோபிநாத், இலங்கை தேசிய ஒலிம்பிக் சம்மேளனத்தின் தகவல் தொழில்நுட்ப முகாமையாளர் ர. ஜெயமோகன், இலங்கை ரெக் பந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவர் வைத்திய கலாநிதி கணேசநாதன், மன்னார் மாவட்ட ரெக் பந்தாட்ட இணைப்பாளர் ரி.சிவானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கை ரெக் பந்தாட்ட சம்மேளனத்தினால் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான ரெக் பந்தாட்ட மேசை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சுகாதார நடை முறையினைக் கருத்தில் கொண்டு முதல் கட்டமாக 50 வீரர்கள் நிகழ்வில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-8-285)

நாடுகள் நடந்துகொள்வதைப்போல தனிப்பட்ட மக்களும் நடந்துகொள்வார்களேயானால், இதற்குனிள் மக்கள் அனைவருக்கும் கைதி உடை தரப்பட்டிருக்கும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனா பரவுகை சுனைக்கெட்டு விட்டதா?

கொரோனாத் தொற்றுக் காரணமாக பல நாடுகள் இன்னமும் இறுக்கமான கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றன.

அவ்வாறிருந்தும் அந்நாடுகள் கொரோனாத் தொற்றினால் திணறிப் போய் இருப்பதைக் காண முடிகிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கையில் கொரோனா பரவுகை வேகம் கொண்டிருக்கும் இவ்வேளையில் கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தளர்த்தப்பட்டிருப்பதை அவதானிக்க முடியும்.

குறிப்பாக பொதுப் போக்குவரத்தும் பாடசாலைகளின் இயங்குநிலையும் திருமணம் உள்ளிட்ட மங்கள நிகழ்வுகளில் பங்கேற் கின்ற பொதுமக்களின் எண்ணிக்கையில் தளர்வு ஏற்படுத்தியமையும் இங்கு சுட்டிக் காட்டப்படக்கூடிய விடயங்கள்.

ஆக, கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டிய இந்நேரத்தில், எதிர்மாறான முடிவுகளை அரசாங்கம் எடுத்திருக்கிறது.

அரசாங்கத்தின் மேற்போந்த முடிவுகள் எங்கு கொண்டு போய்விடும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இவை ஒருபுறமிருக்க, கொரோனாத் தொற்றில் இருந்து இதுகாறும் தன்னைப் பாதுகாத்து வந்த வடமாகாணம் இப்போது பலத்த சவால்களை எதிர்கொண்டுள்ளது.

அதாவது வடபகுதியில் கொரோனாத் தொற்று வேகம் கொண்டுவிட்டது என்பதை அண்மைக்கால நிலைமைகள் ஆதாரப்படுத்தியுள்ளன.

ஆம், அச்சுவேலி சந்தையில் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் நால்வருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதுபோல யாழ்ப்பாணத்தில் தனியார் பஸ் நடத்துநரும் அவரது குடும்பத்தினரும் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

மேற்போந்தவை வடபகுதி முழுவதிலும் கொரோனா பேரலையை ஏற்படுத்தக்கூடிய சாதகமான சூழமைவைச் சுட்டி நிற்கின்றன.

கொரோனாத் தொற்று விடயத்தில் மிகவும் கட்டுப்பாட்டுடன் இருந்த வடபகுதி மக்களிடம் கொரோனாத் தொற்று வேகம் கொண்டுள்ளதெனில், அதற்கான காரணம் என்னவென்று ஆராயின்,

எமது மக்களிடம் இருந்த கொரோனாப் பயம் அகன்றுவிட்டது என்பதைத் தவிர வேறு எந்தக் காரணத்தையும் கண்டறிய முடியவில்லை.

அதாவது கொரோனாத் தொற்றுக் குறித்த பயம் எங்களிடம் நீங்கிவிட, பாதுகாப்பு நடைமுறைகளில் இருந்து நாம் மெல்ல மெல்ல விலகிவிட்டோம்.

அதாவது இலங்கையில் கொரோனாத் தொற்று ஏற்பட்டு ஒரு வருடத்தை நெருங்குகின்ற இவ்வேளையில் அதுபற்றிய சுனைக் கேட்டுக்கு நாம் ஆளாகிவிட்டோம்.

இதுவே கொரோனாத் தொற்று வடபகுதியில் வேகம் கொள்வதற்கு மூல காரணம் எனலாம்.

ஆகவே இது விடயத்தில் நாம் அதிரடியாக விழிப்படைந்து உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

தவறுவோமாயின் அதன் விளைவு மிகப் பாரதூரமாக அமையும் என்பது நிறுதிட்டமான உண்மை.

### காற்றாலை, சூரிய ஒளி மின் உற்பத்திக்கு

# 12 மில்லியன் டொலரை நன்கொடையாக வழங்குவதற்கு இந்தியா இணக்கம்

(கொழும்பு)

சீனாவின் பங்களிப்புடன் யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் மேற்கொள்ளப்படவிருந்த காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டம் தற்போது இந்தியாவின் உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில் மின்சக்தி அமைச்சருடன் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்திய இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இதற்கான முழுச்செலவான 12 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு நன்கொடையாக வழங்குவதாக அறிவித்திருந்தார்.

அந்தவகையில் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும இந்தியாவின் நன்கொடையுடன் யாழ்ப்பாணத்தில் இந்த காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டத்தை மேற்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளுக்கு தற்போது டீசல் மூலமே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சீனாவின் பங்களிப்புடன் இங்கு காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருந்தது.

இது தொடர்பில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் அமைச்சரவை பத்திரமும் முன்வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** வியாபாரிமூலை, நாவலடி, இன்பருட்டி, திக்கம், பாரதிதாசன் சனசமூகநிலையம், முத்துமாரி அம்மன் கோவில், சுப்பர்மடம் மரின்வெல்த் ஐஸ்தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** கோவில்குளம் 10வது ஒழுங்கையிலிருந்து சிதம்பரபுரம்வரை, மடுக்கந்தை யிலிருந்து துட்டுவாகை வரை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை, குடாகச்சக்கொடிய கிராமம், புதிய சின்னக்குளம் கிராமம், சமணன் குளம் கிராமம், வீரபுரம், சின்ன தம்பனை, கெலசியம் பலாவ, ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** பெரியநொச்சிக்குளம், சின்னசிப்பிக்குளம், கொக்குப்படையானிலிருந்து முள்ளிக்குளம் வரை, முள்ளிக்குளம் கடற்படைமுகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## வெட்டுப்புள்ளி விவகார அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாடசாலை வெட்டுப்புள்ளிகள் தொடர்பிலான சிக்கல் குறித்து கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதி செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

வெட்டுப்புள்ளிகளை குறைப்பதில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் அதனைத் தவிர்ப்பதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் ஆகியன அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர், பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

எவ்வாறாயினும், வகுப்புகளில் மாணவர்களின்எண்ணிக்கையை அதிகரிப்பது வெட்டுப்புள்ளி குறித்த பிரச்சினைக்குத் தீர்வாகாது எனவும் அவர் கூறினார்.

அறிக்கையை ஆராய்ந்த பின்னர் இந்தப் பிரச்சினைக்கான தீர்மானம் எட்டப்படும் எனவும் தெரிவித்தார். (4)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனவளக்கலை ஒரு பெட்டகம்



தான் உயரவும், பிறரையும் உயத்தவும் ஏற்ற பயிற்சியும், தொண்டும் மனவளக்கலையில் அடங்கியுள்ளன.

இரண்டு வேளையும் ஆக்கினை, துரியம், சாந்தியோகம்... தவறாமல் தவமியற்றி வாருங்கள். மன அமைதி, அறிவுக்கூர்மை, அறிவின் ஓர்மை, மன உறுதி இவையுண்டாகும்.

தற்சோதனையில் எண்ணங்களை ஆராயுங்கள். விழிப்பு நிலையில் அறிவு செயல்படும். நலம், தீது உணர் ஆற்றல் உண்டாகும். வேண்டாப் பதிவுகளை - வினைப் பதிவுகளை மாற்றி விடலாம்.

ஆசைச் சீரமைப்புப் பயிற்சி செய்யுங்கள். உடல் நலம், மனவளம், பொருள் வளம், நற்புகழ், நிறைவு இவை பெருகும். அமைதியுண்டாகும்.

சினம் தவிர்த்துப் பழகுங்கள். குடும்பம், நண்பர்கள், தொழில் செய்யுமிடத்திலுல்லோர், உற்றார் உறவினர் இவர்களிடம் உங்கள் அன்பு, நட்பு இவை பெருகும். இனிமையும், மகிழ்ச்சியும் உண்டாகும்.

கவலை ஒழிப்புப் பழகுங்கள். அச்சமின்மை, மெய்யுணர்வு, உடல் நலம், மனநிறைவு உண்டாகும்.

நான் யார் என்ற ஆராய்ச்சியில் தெளிவு பெறுங்கள். பேரியக்க மண்டலம், தோற்றம், இயக்கம், விளைவு, அனைத்து மறை பொருட்கள், மனம், உயிர், மெய்ப்பொருள் உணர்வு உண்டாம்.

இவ்வளவு பயிற்சியும், பழக்கமும் இணைந்த ஒரு வாழ்க்கை நலக் கல்வியே "மனவளக்கலை" யாகும். இக்கலையை எளிய முறையில் கற்கும் பேரு பெற்றிருக்கிறீர்கள். இக்கலையின் மாண்புணர்ந்து பழகி நலம் பெற்று மனதில் நிறைவு பெறுங்கள். மனநிறைவைப் பெற்று விட்டால், அறிவு மேலும் உயர்ந்து சிறந்து விளங்கும். பிறவியின் நோக்கம் வெற்றி பெறும். இத்தகைய உயர் வாழ்வுக்கு ஏற்ற ஒரு பெட்டகம் மனவளக்கலை.

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2021-13.03.2021

## நினைத்த காரியங்கள் நினைத்தபடியே நிறைவேறும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



மேஷ இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய், உங்கள் இராசியிலேயே பலம் பெற்று சஞ்சரிக்கின்றார். தொழில் ஸ்தானத்தில் புதன், வியாழன், சனி, சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்கள் இருக்கின்றன. இலாப ஸ்தானத்தில் சுகாதிபதி சந்திரனும், பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி சூரியனும் இணைந்திருப்பதால் நினைத்த காரியங்கள் நினைத்தபடியே நிறைவேறும். தொழில் முன்னேற்றத்தோடு லாபமும் எதிர்பார்த்தபடி வந்து சேரும்.

### கூட்டுக்கிரக யோகம்

உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் புதன், வியாழன், சனி, சுக்கிரன் ஆகிய நான்கு கிரகங்களும் மாதத் தொடக்கத்தில் ஒன்றுகூடிச் சஞ்சரிக்கின்றன. உத்தியோக ஸ்தானாதிபதி புதன், தொழில் ஸ்தானாதிபதி சனியோடு இணைந்திருப்பதால் 'நீண்ட நாட்களாகப் பணிபுரிந்தும் உத்தியோகத்தில் ஒரு முன்னேற்றமும் வரவில்லையே' என்று கவலைப்பட்டவர்கள், இப்பொழுது வி.ஆர்.எஸ். பெற்றுக்கொண்டு வெளியில் வர முயற்சிப்பர். பிள்ளைகளின் உத்தியோக முயற்சி கைகூடி உதிரி வருமானம் உண்டு.

### மகர புதனும், கும்ப புதனும்

மாதத் தொடக்கத்தில் புதன், மகர இராசியில் வக்கிர இயக்கத்தில் சஞ்சரிக்கின்றார். இம்மாதம் 14 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். மார்ச் 7 ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கின்றார். எனவே உடன்பிறப்புகளின் வேலை சம்பந்தமாக செய்த முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் பதவி உயர்வுகள் கிடைக்கும்.

### ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிநாதன் செவ்வாய் இம்மாதம்18 ஆம் திகதி தன ஸ்தானத்திற்கு செல்கின்றார். எனவே தன வரவு தாராளமாக வந்து சேரும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. கடன் சுமை குறையும். சகோதரர்கள் உதவி செய்வார்கள். வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது.

### மகர குருவின் சஞ்சாரம்




மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்று சஞ்சரித்தாலும், சனியோடு இணைந்து நீச்ச பங்க ராஜயோகத்தை தருகின்றார். எனவே தொழிலில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும். இம்மாதம் 21 ஆம் திகதி குரு பகவான் அஸ்தமன நிவர்த்தியாவதால், ஆரோக்கியம் சீராகும். வெளிநாட்டிலிருந்து அனுகூலத் தகவல் வரும். மங்கல ஓசை மனையில் கேட்க வழி பிறக்கும். பொருளாதார நிலை உயரும்.

### கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், இம்மாதம்22 ஆம் திகதி கும்பத்திற்குச் செல்கின்றார். தன ஸ்தானத்திற்கும், களத்திர ஸ்தானத்திற்கும் அதிபதியான சுக்கிரன், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போவதால் வளர்ச்சியில் உள்ள தளர்ச்சி அகலும். வாழ்க்கைத் துணையின் உத்தியோகத்தில் முன்னேற்றம் உண்டு. தங்கம், வெள்ளி போன்ற விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதற்கான வாய்ப்பு கைகூடிவரும். இம்மாதம் ஞாயிறு தோறும் சிவ பெருமானை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். பற்றாக்குறை அகலும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. தாய் மற்றும் உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர். பணிபுரியும் பெண்களுக்கு பதவி உயர்வு உண்டு. கேட்ட சலுகைகள் கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி மற்றும் கல்யாண சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவர்,

## மாற்றங்கள் இல்லம் தேடி வரப்போகின்றன



ரிஷப இராசி வாசகர்களே!

சார்வரி வருடம் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் பாக்ய ஸ்தானத்தில் பாக்கியாதிபதி சனியோடு கூடிச் சஞ்சரிக்கின்றார். நீச்சம் பெற்ற குருவின் பார்வை உங்கள் இராசி மீது பதிகின்றது. ஜென்மத்தில் ராகுவும், 7 இல் கேதுவும் இருப்பதால் நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரப்போகின்றன.

### கூட்டுக்கிரக சேர்க்கை

உங்கள் இராசிக்கு 9 ஆம் இடமான பிதுர்ரார்ஜித ஸ்தானத்தில் புதன், சனி, வியாழன், சுக்கிரன் ஆகிய கிரகங்கள் சேர்க்கை பெற்றிருக்கின்றன. பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். பூர்வீக சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். அரைகுறையாக நின்ற கட்டடப் பணிகள் தொடரும். ஆரோக்கியக் குறைபாடுகள் அகலும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும். யோகம் செய்யும் சனி பலம்பெற்று இருப்பதால் இனி எதிர்பார்த்தது நடக்கும்.

### மகர புதனும், கும்ப புதனும்

மாதத் தொடக்கத்தில் புதன், மகர இராசியில் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். இம்மாதம் 14 ஆம் திகதி வக்கிர நிவர்த்தியாகிப் பலம் பெறுகின்றார். கடன் சுமை குறையும். பிள்ளைகளுக்கு வேலை கிடைக்கும். மார்ச் 7 ஆம் திகதி கும்ப ராசிக்குப் புதன் செல்கின்றார். இந்த நேரம் புதிய ஒப்பந்தங்கள் வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும்.

### ரிஷப செவ்வாயின் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், செவ்வாய். அவர் மாத தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும், இம்மாதம் 18 ஆம் திகதி முதல் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகின்றார். இக்காலத்தில் விரயங்கள் கூடுதலாக இருக்கும். வீடு மாற்றங்கள், உத்தியோக மாற்றங்கள் ஒருசிலருக்கு ஏற்படலாம். கல்யாணம் போன்ற சுபநிகழ்வுகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

### மகர குருவின் சஞ்சாரம்

மகரத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் நீச்சம் பெற்றிருந்தாலும், மகர இராசிக்கு அதிபதியான சனி பகவானோடு சேர்ந்திருப்பதால் நீச்சபங்க ராஜயோகம் ஏற்படுகின்றது. என்னதான் உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு குரு பகவான் பகைக்கிரகமாக இருந்தாலும், குருவின்




பார்வைக்கு பலன் உண்டு. அந்த அடிப்படையில் உங்கள் இராசியையும், 3, 5 ஆகிய இடங்களையும் குரு பார்ப்பதால் உடன்பிறப்புகளின் ஒத்துழைப்போடு ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணையலாம். இம்மாதம் 21 ஆம் திகதி குரு பகவான் அஸ்தமன நிவர்த்தியாவதால் வெளிநாட்டிலிருந்து அனுகூலமான தகவல் கிடைக்கும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு.

### கும்ப சுக்கிரனின் சஞ்சாரம்

மாதத் தொடக்கத்தில் மகரத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன், இம்மாதம் 22 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கின்றார். உங்கள் இராசிநாதனாகவும், 6 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் சுக்கிரன். அவர் 10 ஆம் இடத்திற்கு வரும்பொழுது தொழில் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் அதில் இருந்தபடியே 'சுயதொழில் செய்யலாமா?' என்று சிந்திப்பர். இக்காலத்தில் ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேரும் வாய்ப்பு உண்டு. இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் அம்பிகை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். தடைப்பட்ட காரியங்கள் கை கூடும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். பெற்றோர்கள் பிரியமுடன் நடந்து கொள்வர். பிள்ளைகளால் பெருமை சேரும். பணிபுரியும் பெண்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். வாகனம் வாங்க, வீடு கட்ட, கேட்ட சலுகைகளும் கிடைக்கலாம். நந்தீஸ்வரர் வழிபாடு நன்மைகளை வழங்கும்.

(தொடரும்)

## கிளிநொச்சி...

பிரிவிற்குட்பட்ட உமையாள்புரம் கிராமத்தினைச் சேர்ந்த இரண்டு தரப்புக்கு இடையிலான முறுகல் நிலை வாள்வெட்டில் முடிந்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததுடன், மேலும் மூவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சிலர் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததுடன் மேலும் சிலரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஞா-60,100)

## யாழ்.தீவுகளை...

சந்திப்புக்களை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய கட்சிகளிற்கிடையிலான சந்திப்பு நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வை முன்னிட்டு வெளிநாட்டு தூதரகங்களுடன் அவசர சந்திப்புக்களை நடத்த தீர்மானிக்கப்பட்டது. இதற்காக சர்வகட்சி பிரதிநிதிகளை கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டது.

இரா.சம்பந்தன் அல்லது அவரது பிரதிநிதி ஒருவர், சி.வி.விக்னேஸ்வரன், த.சித்தார்த்தன், சுரேஷ்பிரேமச்சந்திரன், அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரை கொண்ட குழு அமைக்கப்பட்டது.

கூட்டு கட்சிகள் சார்பில் ஊடகங்களுடன் பேச, விடயங்களை கையாள, சுரேஷ் பிரேமச்சந்திரனும் சீ.வீ.கே.சிவஞானமும் நியமிக்கப்பட்டனர்.

அத்துடன், யாழ்.மாவட்டத்திலுள்ள 3 தீவுகளில் ஆரம்பிக்கப்படவுள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டத்தை சீன நிறுவனங்களிற்கு வழங்குவதை எதிர்ப்பதென்றும் முடிவானது.

இது குறித்து தூதரக மட்டங்களில் சந்திப்பை நடத்தி எதிர்ப்பை தெரிவிப்பதென்றும் முடிவானது. (ஞா-33,101)

## முன்னாள் சபா...

பாதிக்கப்பட்ட அவர், தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் (ஐ.டி.எச்) மருத்துவ கண்காணிப்பில் இருந்த வேளையிலேயே உயிரிழந்துள்ளார். (ஞா)

## கொரோனாவால்...

பட்ட நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

அடக்கம் செய்வதற்காக, விசேட நிபந்தனைகளுடன் அதற்கு அனுமதி வழங்கியதாக அந்த நிபுணர் குழுவின் தலைவர், சிரேஷ்ட பேராசிரியர் ஜெனிபர் பெரேரா தெரிவித்தார்.

எனினும் இந்த விடயம் குறித்து தம்மால் சரியான பதிலொன்றை வழங்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சரின் விருப்பத்தின்படி சடலங்களை அடக்கம் மற்றும் தகனம் செய்ய முடியும் என அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் தாங்கள் அடக்கம் செய்ய முடியும் என்று வெறுமனே கூறவில்லை என்றும் சடலத்தை வீட்டுக்கு கொண்டு செல்ல முடியாது என்பதுடன், மரண பரிசோதனை மேற்கொள்ள முடியாது. மணி நேரத்திற்குள் சடலத்தை அடக்கமோ அல்லது தகனம் செய்யவோ அனுப்ப வேண்டும் என பரிந்துரைத்துள்ளதாக அவர் தெரிவித்தார். (ஞா)

## யாழ்ப்பாணத்தில்...

மாகாணத்தில் மூன்று தீவுகள் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் மூன்று தீவுகள் சீன நிறுவனம் ஒன்றுக்கு மின்சக்தி உற்பத்திக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சி.வி.விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் ஒரேநாளில் இரு வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஒரே நாளில் அரசானது இரண்டு வேறுபட்ட தீர்மானங்களை எடுத்துள்ளது. கிழக்கு முனையத்தினை இந்தியாவிற்கு கொடுக்க முடியாது என அறிவித்துள்ளது.

அதேபோல வடக்கு மாகாணத்தில் உள்ள மூன்று தீவுகளில் நெடுந்தீவு, அனலைதீவு மற்றும் நயினாதீவு ஆகிய மூன்றையும் சீன கம்பனிக்கு மின்சக்தி தயாரிப்பதற்காக கொடுப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள். இது மிகவும் பாரதூரமான விடயமாகும். முதலாவது இந்தியாவுக்கு கிழக்கு முனையத்தினை கொடுக்காமை சம்பந்தமாக இந்தியா பார்த்துக் கொள்ளும்.

ஆனால் வடக்கு மாகாணத்தில் உள்ள மூன்று தீவுகளை கொடுப்பது என்பது எமது வட மாகாண பாதுகாப்பிற்கு மிகவும் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பது எனது கருத்து என்றார். (ஞா-33)

## இலங்கைத்...

வில் திறக்கப்படும். அதேபோல், யாழ்ப்பாணம் - மன்னார் இடையிலான ரயில் பாதை சீரமைக்கப்பட்டு வருகிறது.

இதேவேளை, இலங்கை தமிழர் உரிமைக்காக, இலங்கை மத்திய அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில், ஈழத் தமிழர்கள் சமத்துவம், சம உரிமையுடன் வாழ்வதை உறுதி செய்வோம் என்றார். (ஞா)

## 400ஐ நெருங்...

உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 397 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை நேற்றும் 801 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ஞா)

## கஞ்சாவுடன்...

கைது செய்யப்பட்டுள்ளார்.

வாகனத்தில் கேரள கஞ்சாவை எடுத்துச் செல்வதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த வாகனம் முற்றுகையிடப்பட்டு சோதனையிடப்பட்டது.

சம்பவத்தில் ஒரு கிலோவுக்கு அதிகமான கேரள கஞ்சா கண்டுபிடிக்கப்பட்டதுடன் சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா)

## கம்பி...

மதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் கண்டி வீதியில் நேற்று மாலை இரு குழுக்களிடையே மோதல் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது மூன்று பேர் இரும்புக் கம்பிகளால் குறித்த நபரை தாக்கியதுடன் மது போத்தல்களாலும் வீசி தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதில் படுகாயமடைந்த நிலையில் குறித்த நபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர். (ஞா-101)

## வடக்...

கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார்.

இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தில் 10 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் 6 பேருக்கும் (5 பேர் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்தவர்கள்), மன்னார் மாவட்டத்தில் ஒருவருக்குமாக 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது. (ஞா-18,316)

## பாம்பு தீண்டியதில் பல்கலை மாணவி வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைகழக 2ஆம் வருட மாணவி ஒருவர் நாகபாம்பு தீண்டி ஆபத்தான நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏழாலையைச் சேர்ந்த சிவகுமாரன்- மிதுளா என்னும் பல்கலைக் கழக மாணவியே இவ்வாறு ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஞா)


தன நிதானய
திகதி - 2021.02.14
சீட்டிழுப்பு இலக்கம் - 435
A 27 32 35 46
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 14.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2693
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 12 54 55 65
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/02/14
சீட்டிழுப்பு இலக்கம் 4398
P 7 3 8 7 9 6
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 14/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0765
E 20 18 31 69 73

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1666 திகதி 2021.02.14
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
E 03 27 35 65
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
தினம்: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1194
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 14.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 108,126,325
வெற்றி இலக்கங்கள் 01 16 42 49 ஆங்கில எழுத்து M
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
தினம்: ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3524
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 14.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,688,736
வெற்றி இலக்கங்கள் 13 21 22 55 ஆங்கில எழுத்து B
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சுப்பர் ஜக்பொட் 50,50,994/=
திகதி: 14.02.2021
வெற்றி வாரம்: 3075
வர்ணம்: ஊதா
வெற்றி இலக்கங்கள் 28 34 35 51 தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,850,680

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1368 நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 14/02/2021 தினம் ஞாயிற்றுக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் P 03 31 47 53
அடுத்த சுப்பர் ஜக்பொட 68,822,474/=

E 24 30 52 66
சீட்டிழுப்பு வாரம் 690
14.02.2021 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,171,565
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

NLB & DLB
நாகபூசணி நல் ஆசியுடன்
அதிர்ஷ்டத்தை வழங்கும் கனகலிங்கம் திலகவதி
ஒரு வாரத்தில் 3 பேருக்கு தலா ஒரு லட்சம்
ஒருவருக்கு 50 ஆயிரம், 7 பேருக்கு தலா 10,000/= பல ஆயிரம்
என பரிசில்களை அதிர்ஷ்டம் ஊடாக வழங்கியுள்ளோம்.
இஷ்டப்பட்டு எடுத்து இஷ்டப்படி வாழ
அதிர்ஷ்டத்தை நீங்கள் தேடுகிறீர்கள்.
அதிர்ஷ்டசாலிகளை நாங்கள் தேடுகிறோம்.
(5673) முகவர்:- கனகலிங்கம் திலகவதி | யாழ்ப்பாணம். திருநெல்வேலி.

# உருமாறிய கொரோனா வைரஸ் தீவிரம்!

## நாட்டை முடக்க வேண்டும்
## பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத் தலைவர் உபுல் ரோஹண கோரிக்கை

## நாட்டை முடக்க விரும்பவில்லை
## இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவிப்பு





(கொழும்பு)

**புதிய கோவிட்-19 வைரஸ் பாதிப்பு குறித்து சரியான தொழில்நுட்ப மதிப்பீடு செய்யப்படும்வரை நாடு பூட்டப்பட வேண்டும் என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கத் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.**

**நாடு முடக்கத்தின்கீழ் வைக்கப்படும் என்று செய்திகள் பரப்பப்படுகின்றன. எனினும், இப்போதைக்கு, நாங்கள் ஒரு முடக்கத்துக்குச் செல்ல விரும்பவில்லை என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று மாலை தெரிவித்தார்.**

நேற்று நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பிலேயே இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கத் தலைவர் இதனை வலியுறுத்தினார்.

நாட்டில் மக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படாவிட்டால், எதிர்காலத்தில் கொரோனா தொற்றுநோய் கொத்தணிகள் ஏற்படும் அபாயம் உள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரிட்டனில் காணப்படும் கொரோனா வைரஸின் புதிய திரிபு நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் இலங்கையில் இருந்து வருவதாகக் கூறப்படுவதால், நாடு கடுமையான ஆபத்தில் உள்ளது என்றும் உபுல் ரோஹண குறிப்பிட்டார்.

இதேவேளை, பகுப்பாய்வு இல்லாமல் நாட்டை மூடுவதற்கான முடிவை எடுக்க முடியாது என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்றுநோயியல் மற்றும் கோவிட் -19 தொற்றுநோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சின் செயலாளர், மருத்துவர் அமல் ஹர்ஷா டி சில்வா தெரிவித்தார்.

"தற்போதைய சூழ்நிலையில் நாடு பூட்டப்பட வேண்டுமா? இல்லையா? என்பது தொடர்பில் நிபுணர்களின் கருத்தை அறிந்த பின்னரே முடிவு எடுக்கப்படும்.

நாட்டில் கொரோனா வைரஸின் புதிய திரிபு பரவுவது குறித்து உன்னிப்பாக கவனித்து வருகின்றோம்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஞா)


## பதவி வெற்றிடம்

தமிழ் ரைப்பிங், பக்க வடிவமைப்பு மற்றும் விளம்பர வடிவமைப்புச் செய்யக்கூடியவர்கள்(ஆண்கள்) இரவுக் கடமைக்குத் தேவை.
யாழ்.நகருக்கு அண்மையாக உள்ளவர்கள் நேரில் சமுகம் தரவும்.

076 097 3121
பொது முகாமையாளர்,
இல.03, 02 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## பணிப்பெண் தேவை

வீட்டிலே தங்கியிருந்து வயோதிபப் பெண் ஒருவரை பராமரிக்கக் கூடிய பெண் ஒருவர் தேவை. (5679)

077 820 1195, 075 041 3579

அன்னா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 075 3305500 (C-1418)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)


## பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 8 மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று

(கண்டி)

பெரதெனிய பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த எட்டு மாணவர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பல்லைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

பரீட்சைக்கு தயாரான 300 மாணவர்களிடம் நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 08 மாணவர்களுக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மருத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து பரீட்சை ஒத்திவைக்கப்பட்டதுடன் 40 மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஞா)


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலையிலும் அனைத்து நாடுகளுக்கும் வழமைபோல் **100%** பாதுகாப்புடன் எமது சேவைகள் நடைபெற்றுள்ளது.

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
இல.01, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 222 3536

**அருள்**
இ.போ.ச டிப்போ எதிரில், பருத்தித்துறை.
இல.01, தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி.
தொ.பே:- 076 443 1576 (C-1416)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (5675)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
• நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
• பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி
(C-1374)
0768226240 DHL

## காணி விற்பனைக்கு

செம்மணி வீதியில் நாயன்மார்கட்டு கேணியடியில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு.
இரண்டு பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
(5681)
தொடர்பு:-
077 288 0152
077 505 8561

## தவறிவிட்டது

14.02.2021 அன்று கரணவாய் குருக்கள் பகுதிக்கும் அந்தணத் திடல் சந்திக்குமிடையில் ATM காட்டுகள், மோட்டார் சைக்கிள் லைசன்ஸ், இன்சூரன்ஸ், பல்கலைக்கழக அடையாள அட்டை, தே.அ.அட்டை (961430968V) உள்ளடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
(C-1440)
இராஜலிங்கம் கீர்த்தனன்
திக்கானை, கரணவாய், கரவெட்டி.
077 625 8522, 077 620 7939

## தேவை

நெல்லியடியில் இயங்கும் உணவகத்திற்கு சமையல் வேலை தெரிந்தவர், உதவியாளர் தேவை.
(C-1437)
தொடர்பு :- 077 834 2449

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1439)
077 436 6704, 077 179 1963


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.